


Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 228 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை
(12.05.2025) ஹிஜ்ரி 1446, துல்கஃதா - 13, 0115 886187- விலை ரூ.50 பக்கங்கள் 12


# கொத்மலையில் கோர விபத்து!

## நேற்று அதிகாலை சம்பவம்- 22 பேர் பலி

**மரணித்தோரின் குடும்பங்களுக்கு இழப்பீடு**

» 02பக்கம்

## உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு

### ஜனாதிபதி பணிப்பு



கொத்மலை கெரண்டியெல்ல பகுதியில் நேற்று (11) அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் அவர்களது உறவினர்களிடம் வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதி நிதியத்துக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். அதன்படி, இறந்தவரின் உறவினர்களுக்கு இந்தப் பணத்தை உடனடியாக வழங்க ஜனாதிபதி நிதியம் திட்டமிட்டுள்ளது. மேலும், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் காப்புறுதி நிதியம் மூலம் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஜனாதிபதி அனுதாபம்**

நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, கெரண்டியெல்ல பகுதியில் நடந்த பஸ் விபத்து பற்றிய செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்ததாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

நாட்டில் தினமும் அதிகரித்துவரும் வீதி விபத்துகள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

» 02 பக்கம்

## அன்னையர் தினத்தில் தெய்வ வடிவில் தாய்



கொத்மலையில் கவிழ்ந்த பேருந்தில் சிக்கிய தனது குழந்தையைப் பாதுகாக்கும் தாயொருவரின் வீடியோ நேற்று சமூக ஊடகங்களில் பேசுபொருளாகியிருந்தது.

45 வயதுடைய அந்தப் பெண் தனது 9 மாதக் குழந்தையை இடிபாடுகளுக்கு மத்தியில் கட்டிப்பிடித்தபடி தனது இறுதி தருணங்களை கழித்தமை நெஞ்சை உருக்கும் காட்சியாக இருந்தது.

» 02 பக்கம்






## இனப்படுகொலை இடம்பெறவில்லையென சொல்வோருக்கு கனடாவில் இடமில்லை!

### அவர்கள் கொழும்புக்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்கிறார் பிரம்டன் மேயர் பற்றிக்









» 02பக்கம்

## உஷ்



உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்க தென்னிலங்கையில் அரசியல் பேரப் பேச்சுக்கள் அமோகமாக நடக்கிறதாம்.

கொழும்பில் பிரதான சபையொன்றில் சுயாதீனமாக போட்டியிட்டு வெற்றிபெற்ற குழுவொன்று, தமது ஆதரவை வழங்க கோடிகளில் டீல் பேசுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

கொழும்பு தவிர்ந்த இதர வெளிமாவட்ட சபைகளில் ஆட்சியமைக்க இலட்சங்களில் உறுப்பினர் பேரம் நடக்கிறதாம்.

அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா என்கின்றனர் இந்த டீல் பேசும் அரசியல்வாதிகள்...

## இனப்படுகொலை நினைவுத்தூபி வரலாற்றில் முக்கியமான தருணம்

### சொல்கிறார் கரி ஆனந்தசங்கரி




கனடா பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி திறக்கப்பட்டுள்ளமை எங்கள் கூட்டு வரலாற்றில் முக்கியமான ஒரு தருணமாகும் என கனடாவின் நீதியமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த நினைவுத்தூபி இலங்கை அரசாங்கத்தினால் தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலையின்போது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களின் நினைவுச் சின்னமாக விளங்குகின்றது.

உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் வலிமை மற்றும் மீளெழுச்சி தன்மையை இது கௌரவிக்கின்றது. » 02 பக்கம்

## இலங்கை மின்சார சபை தலைவர் திலக் இராஜினாமா



மின்சாரக் கட்டணம் மற்றும் இதர விடயங்களில் வெளியாட்களின் தலையீடு காரணமாக, தனது பதவியை இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய, மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நாட்டின் மின்சாரக் கட்டணத்தை 25 முதல் 35 சதவீதம் வரை அதிகரிப்பது குறித்து இலங்கை மின்சார சபை பரிசீலித்து வருவதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையில் எட்டப்பட்ட பணியாளர் ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் பெற நிர்வாகக் குழுவை வழிநடத்துவதற்கு... » 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



மூழ்கிற கப்பலில ஏன் இருப்பானேன் என்று தான் உந்த சபைத் தலைவர்கள் எல்லாம் விலகுறாங்க போல...

# வெசாக் தினத்தை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்து

2025 வெசாக் பண்டிகையை முன்னிட்டு இன்று (12) முதல் கொழும்பில் சிறப்பு போக்குவரத்து திட்டத்தை செயற்படுத்துவதாக இலங்கை பொலிஸ் அறிவித்துள்ளது.

அதன்படி, அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ள பௌத்தாலோக வெசாக் வலயம் இன்று (12) முதல் 14ஆம் திகதிவரை நடைபெறும்.

ஹுணுபிட்டிய கங்காராமய விகாரையும் பிரதமர் அலுவலகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள புத்த ரஷ்மி வெசாக் வலயம் இன்று 12 முதல் 16 வரை நடைபெறுவதுடன், மற்றொரு வெசாக் வலயம் இன்று (12) முதல் 13 வரை பிரேப்ரூக் பிளேஸில் நடைபெற உள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, பௌத்தாலோக வெசாக் வலயம் சிறைச்சாலை சந்திக்கு அருகிலுள்ள பேஸ்லைன் வீதியில் இருந்து பொரல்ல சந்தி, டி.எஸ். சந்தி, கனத்தே சுற்றுவட்ட சந்தி மற்றும் பௌத்தாலோக மாவத்தை வழியாக பம்பலப்பிட்டி சந்திவரை பரவியுள்ளது.

புத்த ரஷ்மி வெசாக் வலயம், கொம்பனி வீதி பொலிஸ் சுற்றுவட்டம், குமாரதுங்க முனிதாச மாவத்தை, கொம்பனி வீதி சந்தி, ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, பித்தல சந்தி மற்றும் ப்ளவர் வீதி முதல் பிரதமர் அலுவலகம் வரையிலான பகுதிகளை உள்ளடக்கும். இதில் ஜினார்த்தன மாவத்தை, நவம் மாவத்தை மற்றும் பெரஹெர மாவத்தை போன்ற சுற்றியுள்ள பகுதிகளும் அடங்கும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காலி முகத்திடல் மற்றும் அருகிலுள்ள பகுதிகளுக்கு அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் வரவிருப்பதால், இந்த பகுதியில் சிறப்பு போக்குவரத்து திட்டம் செயற்படுத்தப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதன்படி, மே 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில், கொழும்பு கோட்டை, காலி முகத்திடல், துறைமுக நகரம் மற்றும் கொள்ளுப்பிட்டி சந்தி உள்ளிட்ட பல பகுதிகளில் வாகன போக்குவரத்து இரவு 7:00 மணிமுதல் ஒருவழிப் போக்குவரத்துக்கு மட்டுப்படுத்தப்படும்.

இந்த வீதிகளில் அத்தியாவசிய சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகள் அல்லது நிறுவனங்களுக்குச் செல்வோர், குடியிருப்பாளர்கள் மற்றும் வாகனங்கள் தேவைக்கேற்ப அனுமதிக்கப்படும். இருப்பினும், இந்த காலத்தில் கொள்கலன் லொறிகள் மற்றும் டிப்பர் லொறிகள் இந்த வெசாக் வலயங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படாது.

போக்குவரத்து நெரிசல் குறைந்தவுடன், அனைத்து வீதிகளும் வழக்கமான இருவழிப் போக்குவரத்துக்குத் திரும்பும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெசாக் பார்வையிட வருவோருக்கு பாதுகாப்பு மற்றும் வசதியை உறுதிசெய்வதற்காக வெசாக் பண்டிகைக் காலம் முழுவதும் இலங்கை பொலிஸ் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் திருமண விருந்துக்குச் சென்று வீடு திரும்பிய மணமகன் மாரடைப்பால் மரணம்!

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணத்தில் திருமணமாகி ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், உறவினர்களின் வீட்டுக்குச் சென்று திருமண விருந்து உண்டுவிட்டு திரும்பிய கணவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதன்போது சுழிபுரம் - பெரியபுலோ மேற்கு பகுதியைச் சேர்ந்த பரஞ்சோதி ததீஸ்கரன் (வயது 29) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபருக்கு கடந்த 09.04.2025 அன்று திருமணம் நடைபெற்றது. இந்நிலையில் தம்பதிகள் இருவரும் நேற்று முன்தினம் (11) உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்று திருமண விருந்து உண்டுவிட்டு வீடு வந்தவேளை வாந்தி ஏற்பட்டது. இந்நிலையில் வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெற்றும் வாந்தி குணமாகவில்லை.

பின்னர் சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# சப்ரகமுவ பல்கலையில் மேலும் ஐந்து மாணவர்கள் இடைநீக்கம்

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த மேலும் ஐந்து மாணவர்கள், பகிடிவதை சம்பவம் தொடர்பில் வகுப்புகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து பல்கலையின் துணைவேந்தர் பேராசிரியர் சுனில் சாந்த தெரிவிக்கையில், அண்மையில் பகிடிவதை காரணமாக உயிரிழந்த மாணவரின் இறப்புக்கு முன்னதாக அதே பீடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பகிடிவதை சம்பவம் குறித்து இந்த இடைநீக்கங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

மாணவரின் மரணம் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட குழுவின் விசாரணையின் அடிப்படையில் இந்த ஐவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

# நிரந்தர பாதசாரிக் கடவை அமைக்கப்பட வேண்டும்

## முன்னாள் உறுப்பினர் கோரிக்கை

(பு.கஜிந்தன்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்டதும் வலிகாமம் வலய பாடசாலையுமான பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் சண்டிலிப்பாய்-பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கருகே உள்ளது. இவ்வீதி ஐறோட் திட்டத்தின்கீழ் காபட் வீதியாக புனரமைப்பு செய்யப்பட்டபோதும் இப்பாடசாலை அருகே பாதசாரிக் கடவையொன்று அமைக்கப்படாததால் பாடசாலை மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் வாகன நெரிசல் மிகுந்த நேரங்களில் மிகுந்த நெருக்கடியை எதிர்நோக்கியதால் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பிரதேச சபை, பிரதேச செயலகம் ஊடாக முறைப்பாடு செய்ததால் தற்காலிக பாதசாரிக் கடவை வர்ணந்தீட்டப்பட்டு அமைக்கப்பட்டது.

ஆனாலும் பிரான்பற்று சந்தியிலிருந்து இது வளைவுகளற்ற நேர்வீதியாக உள்ளதால் வெளிப் பிரதேசம், வெளிமாவட்டங்களிலிருந்து வருபவர்களுக்கு பாதசாரி கடவை குறியீடோ அல்லது பாடசாலை அமைவிடமோ தெரியாத காரணத்தால் வேகமாக நேராக வாகனங்களை செலுத்துவதால் மாணவர்கள் பெற்றோர் ஒருவகை அச்ச உணர்வுடனே வீதியை கடக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

ஆகவே இவ்வீதி சொந்தமாகவுள்ள மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் (RDD) வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) ஆகியன விரைந்து தலையிட்டு இவ்வீதியில் பாடசாலைக்கருகில் வீதியின் இருபுறமும் பாடசாலை இருப்பதற்கான அடையாள குறியீட்டு பதாகை அமைக்க நடவடிக்கை எடுப்பதோடு, தூரத்திலிருந்து வரும்போதே தெரியக்கூடியதான ஒளிரும் நிரந்தர பாதசாரிக்கடவை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மானிப்பாய் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அ.ஜோன் ஜிப்பிரிக்கோ கோரிக்கை விடுத்துள்ளார்.

# புதுக்குடியிருப்பு, ஆத்துப்பிலவில் அறநெறிப் பாடசாலை ஆரம்பிப்பு

## ரவிகரன் எம்.பி. பங்கேற்பு





(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, 02ஆம் வட்டாரம் கைவேலி, ஆத்துப்பிலவு ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தில் நேற்று (11) அறநெறிப் பாடசாலை தொடக்கநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

அந்தவகையில் ஆத்துப்பிலவு ஸ்ரீ கிருஸ்ணர் ஆலயத்தின் பொருளாளர் நாகரத்தினம் சுகிர்தா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வானது, பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், விருந்தினர்களது உரைகள் என்பன இடம்பெற்றதுடன், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கர்ணன் சன சமூக நிலையச் செயலாளர் தங்கராசா தங்கராஜேஸ்வர் (மன்றா), புதுக்குடியிருப்பு பிரதேச இந்து மா மன்றத் தலைவர் செல்லையா மேகநாதன், புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல அறநெறிப் பாடசாலைகளை இயக்கிவருபவரான தில்லையம்பலம் அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழின அழிப்பு வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு




(பு.கஜிந்தன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தமிழின அழிப்பு வாரத்தை முன்னிட்டு மே 18 முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வானது நல்லூர் தியாக தீபம் நினைவிடம் முன்பாக நேற்று (11) உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வினை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆரம்பித்து வைத்தார்.

நேற்று ஆரம்பமான 'தமிழின அழிப்பு வாரம்' எதிர்வரும் 18ஆம் திகதி நிறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கைதான நடிகை பிணையில் விடுதலை

வெலிக்கடை பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்ட பிரபல திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நடிகை சேமினி இத்தமல்கொட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் விபத்துச் சம்பவம் குறித்து பொலிஸில் புகார் அளிக்கச் சென்றபோது, வேறொரு வழக்கில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நடிகை செமினி இத்தமல்கொட ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவ னத்தை நடத்தி வருகிறார். மேலும் அந்த நிறுவனம் தனது ஊழியர் களுக்கு ஊழியர் சேமலாப நிதி நிலுவைத் தொகையை வழங்கத் தவறியது தொடர்பாக பல வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இந்த வழக்குகள் தொடர்பாக அவருக்கு எதிராக பல பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

நடிகைக்கு எதிராக நீண்ட காலமாக பிடியாணைகள் நடைமுறையில் இருந்தாலும், சில பொலிஸ் அதிகாரிகள் அவற்றை செயல்படுத்தாமல் மறைத்து வருகின்றனர். இந்த சூழ்நிலை காரணமாக, நுகேகொடை நீதிமன்றம் நுகேகொடை பிரிவு பொலிஸ் கண்காணிப்பாளருக்கு அழைப்பாணை அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

வெலிக்கடை நிலையத்தின் புதிய பொலிஸ் அதிகாரி, நடிகைக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அழைப்பாணையை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தபோது இந்த சம்பவம் பதிவாகியுள்ளது. நேற்றுமுன்தினம் அவர் ஒரு கார் விபத்து தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்கு வந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

உரிமம் இல்லாமல் பாதுகாப்பு சேவையை இயக்கிய குற்றச்சாட்டின் பேரில் சேமினி இத்தமல்கொட, டிசம்பர் 16, 2021 அன்று கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

கிராண்ட்பாஸ் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முன்னர் அழைக்கப்பட்டபோது, சந்தேக நபரான சேமினி இத்தமல்கொட நீதிமன்றத்தில் ஆஜராகாததால், அந்த நேரத்திலும் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பின்னர் நீதிமன்றத்தில் ஆஜரான நடிகையின் பிடியாணைகளை திரும்பப் பெற நீதிமன்றம் அப்போது முடிவு செய்தது. மேலும் உரிமம் இல்லாமல் பாதுகாப்பு சேவையை இயக்குவது குற்றம் என்று அவர் ஒப்புக்கொண்டார்.

அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இந்தப் பாதுகாப்பு சேவை நிலையத்தில் பணியாளர் பிரச்சினைகள் தொடர்பாக அவர் மீண்டும் நீதிமன்றத்தில் தேடப்பட்டார்.

கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நடிகை சேமினி இத்தமல்கொடவை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (11) உத்தரவிட்டது.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பொலிஸார், தனியார் பாதுகாப்பு நிறுவனத்தை நடத்தி ஊழியர் சேமலாப நிதி நிலுவைத் தொகையை செலுத்தத் தவறியதற்காக சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றம் 07 பிடியாணைகளை பிறப்பித்துள்ளதாக தெரிவித்தனர்.

சந்தேகநபர் செமினி இத்தமல்கொடவின் சட்டத்தரணிகள், தமது கட்சிக்காரர் ஒரு நடிகை என்றும் நீதிமன்றத்தைத் தவிர்க்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை என்றும் கூறி, நீதிமன்றத்தில் சாட்சியங்களை முன்வைத்தனர்.

சில வழக்குகள் தொடர்பான பணத்தை ஏற்கனவே அவர் செலுத்திவிட்டதாகவும் அந்த வழக்குகளை தொழிலாளர் சபை திரும்பப் பெற்றுவிட்டதாகவும் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் பண்டார இலங்கசிங்க, சந்தேக நபரை ரூ.100,000 சீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார்.

## அன்னையர் தினத்தில்...

பஸ் விபத்தின் பாதிப்பிலும் தனது குழந்தையை பாதுகாத்த அந்த தாயார் வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

அவரது கணவனும் விபத்தில் உயிரிழக்க , தாயாரால் காக்கப்பட்ட அந்த குழந்தை, மீட்கப்பட்டு நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறது. குழந்தையின் உடல்நிலை சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அன்னையர் தினமான நேற்று தன்னுயிரையே பொருட்படுத்தாமல் குழந்தையை காத்த அந்த தாயாருக்கு 'தமிழனின்' சிரம்தாழ்ந்த வணக்கமும் அஞ்சலியும்.

## இனப்படுகொலை...

கனடாவில் தமிழர் இனவழிப்பு நினைவுத் தூபியை நிர்மாணிப்பதில் தான் எதிர்கொண்ட சவால்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுண், தமிழர்கள் இனவழிப்பின் அளவை மறக்கக்கூடாது எனத் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படவில்லை என தெரிவிப்பவர்களுக்கு பிரம்டனில் இடமில்லை. கனடாவில் இடமில்லை. கொழும்புக்கு திரும்பிச்செல்லுங்கள் என இனப்படுகொலை நினைவுத்தூபி திறப்பு விழாவில் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தினால் படுகொலை செய்யப்பட்டார்கள், இலங்கை அரசாங்கம் தவறான தகவல்களை பரப்பிவருகின்றது எனத் தெரிவித்த பிரம்டன் மேயர், அவர்கள் உண்மைக்காகவும் நீதிக்காகவும் குரல்கொடுத்த தமிழர்களை இழிவுபடுத்தவும் தாக்கவும் முயன்றனர்.

இது ஒரு உடல்ரீதியான இனப்படுகொலை மாத்திரமல்ல உலகின் அனைத்து பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் மீதான தாக்குதல் எனத் தெரிவித்தார். தமிழர் படுகொலை நினைவுதூபி என நகரத்தில் உருவாகியுள்ளமை குறித்து நான் பெருமிதம் அடைகின்றேன். ஆனால் இன்னமும் செய்யவேண்டிய பணிகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கை மின்சார...

முடிக்க வேண்டிய இரண்டு படிகளில் ஒன்று மின்சார உற்பத்தி செலவை மீட்டெடுக்கக்கூடிய ஒரு கட்டண முறையை அறிமுகப்படுத்துவதாகும்.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையமும் இலங்கை மின்சார சபையும் ஒப்புக் கொண்ட சூத்திரத்தின்படி மின்சாரக் கட்டணத்தைத் திருத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அது தயாரிக்கப்பட்ட பிறகு பொதுப் பயன்பாட்டு ஆணையத்தால் இந்த திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மின்சாரக் கட்டணத்தை திருத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரும் நிலையில், இலங்கை மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாபிட்டிய தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக அறியமுடிந்தது. சபைத் தலைவரின் இராஜினாமா அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவந்தது.

## இனப்படுகொலை நினைவு...

அவர்களின் அர்ப்பணிப்பே இந்த நினைவுத்தூபி உருவாவதற்கான காரணம்.

நான், கனடா பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன், கனடா தமிழர் தேசிய பேரவை, பிரம்டன் தமிழ் சங்கம் ஆகிய தரப்பினருக்கும் எங்கள் கதைகள் ஒருபோதும் மறக்கப்படாமலிருப்பதற்காக போராடியவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் தொடர்ந்தும் நீதிக்காக குரல்கொடுக்கும் அதேவேளை ஐக்கியப்பட்டவர்களாக வலிமையானவர்களாக விளங்குவோம்.

## உயிரிழந்தவர்களின்...

இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கான நிரந்தரத் திட்டத்தை வகுப்பதற்கு அரசாங்கம் தற்போது மும்முரமாக செயற்பட்டு வருகிறது.

தற்போதுள்ள சட்டங்களை செயல்படுத்துவதன் மூலமும் சாரதிகளின் மனப்பான்மையை மேம்படுத்துவதன் மூலமும் இவ்வாறான விபத்துகளை கணிசமாகக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காக கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்று(நேற்று) காலை நடந்த இந்த கொடூரமான வீதி விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க சகல தொடர்புடைய வைத்தியசாலைகளையும் தயார்படுத்தவும் இது தொடர்பாக தேவையான அனைத்து எதிர்கால நடவடிக்கைகளையும் எடுக்கவும் பாதுகாப்புப் படையினருக்கும் சுகாதாரத் துறையினருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

## கொத்மலையில்...

- கணேசன், கேதீஸ், திவாகரன் -

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறம்பொடை, கெரண்டி எல்ல பகுதியில் நேற்று (11) அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 22 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 35 பேர்வரை காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.


இவ்விபத்தில் 35 க்கும் மேற்பட்டோர் காயமடைந்து கொத்மலை, கம்பளை, நாவலப்பிட்டி மற்றும் நுவரெலியா வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (11) அதிகாலை 4:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் கொத்மலை பொலிஸார், ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக்கோளாறே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன மற்றும் போக்குவரத்து மற்றும் அதிவேக வீதிகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமையை ஆராய்ந்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



பொலிஸார் மற்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளன.

கதிர்காமத்திலிருந்து கண்டி - நுவரெலியா பிரதான வீதி ஊடாக குருணாகல் நோக்கி பயணித்த இ.போ.ச. பஸ் ஒன்றே இவ்வாறு வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த பஸ்ஸில் 60க்கும் 70 க்கும் இடைப்பட்ட பயணிகள் பயணித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர்களில் பஸ் சாரதியும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்** உங்கள் பங்குதாரர்களால் சற்று எரிச்சல் அடைவீர்கள். அவசரத் தன்மையால் அதிர்ஷ்டம் கை நழுவிப்போகும்.

**ரிஷபம்** நண்பர்களோடு சந்தோஷமாக விருந்துண்ணுவீர்கள். நீண்ட நாள் கடன் இன்று தீரப்போகிறது.

**மிதுனம்** உங்கள் மனக்குறையை மற்றவர்களிடம் கொட்டிவிடுவீர்கள். பிள்ளைகளால் மனக் கவலை அடைவீர்கள்.

**கடகம்** வீடு வாகனங்களால் சற்று செலவுகள் அல்லது தொல்லைகள் உண்டு. ஆனாலும் குடும்ப சுகம் உண்டு.

**சிம்மம்** இன்ப அனுபவங்களால் மன நிம்மதி அடைவீர்கள். எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும்.

**கன்னி** எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளிக்குமளவு பணம் இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்.

**துலாம்** குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் நாள். சில முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

**விருச்சிகம்** தேவையற்ற அலைச்சல்களால் விரக்தி அடைவீர்கள். உங்கள் பணம், பொருள் நஷ்ட மேற்படலாம்.

**தனுசு** போட்டிப் பந்தயங்களில் திடீர் பண வரவு ஏற்படும் நாள். தொழில் வகையில் சகாக்களின் உதவிகள் கிட்டும்.

**மகரம்** தொழில் வகையில் திட்டமிட்ட காரியத்தை இன்று நிறைவேற்றுவீர்கள். குடும்ப உறவுகளால் மகிழ்ச்சி.

**கும்பம்** உடல் உழைப்பு அதிகமாக தேவைப்படும் நாள். எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**மீனம்** திட்டமிட்ட காரியத்தை நடைமுறைப்படுத்துவதில் பல தடைகளை சந்திப்பீர்கள். எதற்கும் நிதானம் வேண்டும்.

**திதி:** பௌர்ணமி மு.இ.10.25 வரை பின் பிரதமை
**நட்சத்திரம்:** சுவாதி மு.ப.6.17 வரை பின் விசாகம்
**பிறை :** வளர்பிறை மு.இ.10.25 வரை பின் தேய்பிறை
**யோகம்:** சித்த யோகம்; மு.ப.6.17 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** காலை- 5.54 – 6.54 மணிவரை பகல்- 12.54 – 1.54 மணிவரை மாலை- 2.54 – 3.54 மணிவரை
**ராகு காலம்:** 7.24 – 8.54 மணிவரை
**எமகண்டம் :**10.24– 11.54 மணிவரை
**குளிகை :**1.24 – 2.54 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மீன-மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் (பின்னிரவு 2.27 வரை மீன ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 6.17 வரை**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**இன்று முற்பகல் 6.17 மேல்**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விசேட தினம்:** சித்திரைப் பௌர்ணமி, சித்திர குப்தர் விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி மக்களை வாட்டுவதை உடனடியாக நிறுத்துங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்து



மின்சாரக் கட்டணத் திருத்தத்தில் 25% முதல் 30% வரையான அளவில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியை உடனடியாக நிறுத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்குமுன், இலங்கையின் கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வை (DSA) மறுபரிசீலனை செய்வதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, முந்தைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) மேற்கொண்ட உடன்படிக்கைகளை அப்படியே செயல்படுத்துவதன் விளைவாக இவ்வாறு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஜூலை மாதம் நடைபெறவுள்ள மீளாய்வுக்கு முன் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தி நிபந்தனைகளை நிறைவேற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்பது இப்போது தெளிவாகிறது.

கடந்த ஆண்டு இலாபம் ஈட்டிய இலங்கை மின்சார சபை பெப்ரவரி மாதம் முதல் நட்டமடைந்து வருவதாகவும் அது எண்ணிக்கையில் ரூபா 271.1 பில்லியன் அளவுக்கு இருப்பதாகவும் கூறி, அன்று மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை கைவிட தயாராகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

ரூபா 9000 மின்சாரக் கட்டணத்தை ரூபா 6000 வரையும் ரூபா 3000 மின்சாரக் கட்டணத்தை ரூபா 2000 வரையும் 33% குறைப்பதாக தற்போதைய ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, இவ்வாறு நாட்டு மக்களை துன்பத்துக்கு உள்ளாக்குவது ஜனநாயக விரோத செயல் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இதற்கு முன்னரும் தற்போதைய மின்சக்தி அமைச்சர் உட்பட அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாது என அறிவித்தபோதும், எதிர்க்கட்சியாக நாங்களும் மின்சார நுகர்வோர் அமைப்புகளும் எழுப்பிய குரலுக்கு பதிலளித்து, பொதுப் பயன் பாட்டு ஆணைக்குழு ஜனவரி மாதத்தில் 20% மின்சாரக் கட்டணத்தைக் குறைத் ததையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதன்படி, இம்முறையும் மின்சாரக் கட்டண உயர்வுக்கு எதிராக அனைவரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டின் மின்சார நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ளோம் என வலியுறுத்துகிறேன் – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு கொட்டாஞ்சேனை மாணவிக்கு நீதி கோரி தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்





**(தலவாக்கலை நிருபர்)**

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 16 வயதான மாணவி டில்ஷி அம்ஷிகாவின் மரணத்துக்கு நீதி கோரியும் பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் தலவாக்கலையில் நேற்று மாலை (11) கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

தலவாக்கலை தோட்ட பெற்றோர், மாணவர்கள், சிவில் அமைப்புகள், மற்றும் பெண்கள் இணைந்து இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

பாரதி தமிழ் மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்று மாலை ஆரம்பிக்கப்பட்ட இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது ஊர்வலமாக தலவாக்கலை ட்றூப் வீதி வழியாக தலவாக்கலை பஸ் நிலையத்தை வந்தடைந்தது. அங்கு ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியும் சுலோகங்களை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''அரசாங்கம் பாடசாலை மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும், உயிரிழந்த மாணவி டில்ஷி அம்ஷிகா தனது உயிரை மாய்த்துக்கொள்வதற்கு காரணமாக இருந்த அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும், மாணவியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும்'' எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர். இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது சிவில் சமூகப் பிரதிநிதிகள், பெண் சமூக செயற்பாட்டாளர்கள், சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அன்னையர் தினத்தை முன்னிட்டு 'பேறுகால உளநலம்' நூல் வெளியீடு



**(பு.கஜிந்தன்)**

உலக அன்னையர் தினத்தை முன்னிட்டு அரும்பு நிலையம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை இணைந்து வெளியிட்ட வைத்தியர் சிவசுப்பிரமணியம் சிவதாஸ் எழுதிய 'பேறுகால உளநலம்' நூல் வெளியீடும் உலக அன்னையர் தின நிகழ்வும் நேற்று (11) யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ். போதனா வைத்தியசாலை தாய்மார்களின் பேறுகால உளநல நிபுணர் ஞானரூபன் கவி மற்றும் கோகிலா மகேந்திரன் கலந்துகொண்டனர்.

இதில் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு விதமான பிரச்சினைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வைத்தியர் சிவசுப்பிரமணியம் சிவதாஸ் எழுதிய பேறுகால உளநல நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கலாநிதி த.சத்தியமூர்த்தி, குழந்தை நல நிபுணர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள், மருத்துவபீட மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# 9ஆவது மாடியிலிருந்து தவறி விழுந்தவர் உயிரிழப்பு

## நிறப்பூச்சி பூசிக்கொண்டிருந்தபோது சம்பவம்

கொழும்பு - வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சார்மன் வீதி பகுதியில் அமைந்துள்ள 10 மாடிக கட்டிடத்தில் இருந்து கீழே விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மொரட்டுவ, மொரட்டுவெல்ல பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

உயிரிழந்தவர் ஒன்பதாவது மாடியில் சுவரில் நிறப்பூச்சு பூசிக்கொண்டிருந்தபோது கட்டிடத்திலிருந்து கீழே விழுந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் களுபோவில வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**கொழும்பு-15 மாதம்பிட்டி ஹேனமுள்ள வீதியில் அமைந்துள்ள மீஜய செவன அடுக்கு மாடி வீட்டுத்திட்டத்தில் அமைந்துள்ள வரவேற்பு மண்டபத்தில் ASMA நலன்புரி சங்கத்தின் தலைவர் லஹிரீன் சஹிபுதீன் ஏற்பாடு செய்த இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு நேற்று (11) நடைபெற்றது. இந்நிகழ்வில் ASMA அறக்கட்டளை தலைவர் லஹிரீன் சஹிபுதீன், அதன் பொருளாளர் நஜிப்தீன் சஹிபுதீன், முகமையாளர் எம்.என்.எம்.பர்ஹான் ஆகியோர் மூக்குக் கண்ணாடி வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.**

# கண்டியில் கட்டப்பட்டுவரும் நாட்டின் பல்வகை போக்குவரத்து முனைய கட்டுமானம் 2027இல் நிறைவு

## பணிகளை விரைவுபடுத்த அரசாங்கம் திட்டம்





**(எம்.ஏ.அமீனுல்லா)**

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கண்டியில் கட்டப்பட்டு வரும் நாட்டின் பல்வகை போக்குவரத்து முனையத்தின் கட்டுமானத்தை 2027ஆம் ஆண்டில் முடிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நாட்டின் போக்குவரத்துத் துறையில் ஒரு திருப்புமுனையைக் குறிக்கும் இந்த பல்வகை போக்குவரத்து முனையத்துக்கு சுமார் 15 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து துணை அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன, சமீபத்தில் மல்டிமொடல் போக்குவரத்து முனையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டபோது ஊடகங்களுக்கு இந்தத் தகவலை வெளியிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கண்டியில் போக்குவரத்து பஸ்கள் மற்றும் ரயில்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் கண்டி தேசிய மருத்துவமனைக்கு விரைவாகச் செல்வதற்கு இந்தத் திட்டம் உதவும்.

பஸ் நிறுத்துமிட வசதிகள், பல்பொருள் அங்காடிகள், வணிக வளாகங்கள், உணவகங்கள், வங்கிகள் போன்ற அனைத்து வசதிகளும் இதன்மூலம் கிடைக்கும் என்றும் இதுபோன்ற வசதிகளுடன் கூடிய பல மாதிரி போக்குவரத்து முனையம் நாட்டின் எந்த நகரத்திலும் இல்லை.

உலக வங்கியின் நீண்டகால கடன் உதவி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஆகியவை இந்தத் திட்டத்துக்குச் செலவிடப்படும் என்றும் போக்குவரத்து மற்றும் வீதிகள் அமைச்சகத்தின் கீழ் ரயில்வே துறை, நெடுஞ்சாலைகள் அமைச்சகம் மற்றும் பல நிறுவனங்கள் இணைந்து இந்தப் பிரமாண்டமான திட்டத்தில் செயல்படும் என்றும் அவர் கூறினார்.


# தங்க நகைகள் ஏல விற்பனை

பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனம் எனும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கும் நிறுவனமாக வணிக பணிப்பாளர்களது அனுமதியுடன் நடாத்திச் செல்லும் ஏஷியா எசட் ஃபினான்ஸ் பீ.எல்.சீ இன் கீழ் குறிப்பிடப்படும் கிளைகளில் 18.04.2025 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வழங்கிய தொகையை செலுத்த குறிப்பிடப்பட்டிருக்கும் திகதியிலிருந்து 30 நாட்களை கடந்தும் கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ள தங்கக் கடன்களுக்கு வைப்பாக அடகு வைத்துள்ள தங்க நகைகளை அடகுச் சட்டம் 85 ஆம் இலக்கத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக் கேற்ப கீழ்வரும் இடங்களில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| அடகு வைக்கப்பட்டுள்ள கிளை | ஏலமிடப்படும் திகதி | ஏல விற்பனை இடம் |
|---|---|---|
| அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடி,கல்முனை, சம்மாந்துறை, மட்டக்களப்பு, செங்கலடி, வாழைச்சேனை, பொத்துவில், கிண்ணியா, திருகோணமலை, கந்தளாய், மூதூர், சேருநுவர, திருக்கோவில், அம்பாறை | 15.05.2025 | இலக்கம் 187, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு |
| மன்னார், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், புதுகுடியிருப்பு, வவுனியா, சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித் துறை, வேலணை, கிளிநொச்சி, அச்சுவெலி, செட்டிக்குளம், மானிப்பாய், முழங்காவில், உரும்பிராய், மல்லாவி | 15.05.2025 | இலக்கம் 109, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் |
| கொட்டாஞ்சேனை, மொறட்டுவ, கம்பஹா, கிராண்ட் பாஸ், பிரதான காரியாலயம், களுத்துறை, பாணந்துறை, வெள்ளவத்தை, நீர்கொழும்பு, மத்துகம, எலகந்த, மட்டக்குழிய, ஹோமாகம | 16.05.2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 6 |
| பொகவந்தலாவ, ஹட்டன், மஸ்கெலிய, பூண்டுலோயா, ராகல, தலவாக்கலை, கம்பளை, நாவலப்பிட்டி, புசல்லாவ, வத்தேகம, மாத்தளை,கட்டுக்கஸ்தோட்டை, நாவுல,திகன, அக்கர பத்தன, ஹாவா எலிய,ஹங்குரன்கெத்த, கொட்டக்கல, டயகம , ஹபுகஸ்தலாவா | 16.05.2025 | இலக்கம் 101, பிரதான வீதி, ஹட்டன் |
| பதுளை, மஹியங்கனை, மொனராகலை, ஹப்புத்தளை, வெலிமட, பசர, பிபில, லுணகல, கிரந்துருகோட்டே | 16.05.2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 6 |
| சிலாபம், கற்பிட்டி, குருநாகல், புத்தளம், உடப்பு, வென்னப்புவ, வாரியபொல, தங்கொடுவா | 16.05.2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 6 |
| பேருவளை, காலி, மாத்தறை, அம்பலன்தொட்ட, எல்பிடிய, தெனியாய | 16.05.2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 6 |
| பலாங்கொட, தெரணியகல, எஹலியகொட, குருவிட்ட, மாவனெல்ல, ரக்வான, ருவன்வெல்ல | 16.05.2025 | இலக்கம் 344, காலி வீதி, கொழும்பு 6 |

குறிப்பு:- ஏல விற்பனைக்கு நுழைவு கட்டணமாக ரூ.5.000.00 அறவிடப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
The Muthoot Group

பிரதி பொது முகாமையாளர் (தங்க கடன்)
இல. 76, பார்க் வீதி, கொழும்பு 02.
துரித அழைப்பு : 0767 888 222 தொ.பே: 0117 699 000
பதிவு இலக்கம்: PB139

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 மே 12ஆம் திகதி, திங்கட்கிழமை

# நீதியின் பார்வை தேவை!

உயிரை மாய்த்துக் கொண்ட கொட்டாஞ்சேனை பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமி, பம்பலப்பிட்டியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்று வந்த காலப்பகுதியில் அந்தப் பாடசாலையின் ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறித்து கவனஞ்செலுத்தவேண்டியிருக்கிறது. இந்தச் செய்தி வெளிவந்த காலத்தில் வெளிவந்துள்ள நீதிமன்றத் தீர்ப்பொன்றையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கொட்டாஞ்சேனை மாணவியை பாலியல் வன்கொடுமைக் குள்ளாக்கினார் என்ற சந்தேக நபரான ஆசிரியர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை, கல்பொத்த வீதியிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் வசித்து வந்த தில்ஷி அம்ஷிகா என்ற 16 வயது மாணவி கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி 6ஆவது மாடியிலிருந்து குதித்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். பின்னர் மே 04 ஆம் திகதி மாணவியின் பெற்றோர், ஊடக சந்திப்பை நடத்தி பாடசாலை ஆசிரியர் மற்றும் மேலதிக ஆசிரியரின் செயல்களே அவரது மரணத்துக்குக் காரணமென்று குற்றஞ்சாட்டினர்.

அதன்படி, மாணவியின் மரணம் குறித்து நியாயமான விசாரணை நடத்தக் கோரி கடந்த மே 08ஆம் திகதி கொழும்பில் மூன்று இடங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தப் போராட்டங்கள் கொட்டாஞ்சேனை அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்துக்கருகிலும் பம்பலப்பிட்டியிலுள்ள பாடசாலையொன்றுக்கருகிலும் தனியார் வகுப்பொன்றுக்கருகிலும் நடத்தப்பட்டன.

இது குறித்து பாராளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டது. இதற்கிடையில், சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட தனியார் கல்வி நிலையத்தின் உரிமையாளர் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று முறைப்பாடளித்திருந்தார். இந்தச் சம்பவம் குறித்த வழக்கு மே 19ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வரவுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு அமைப்பாளரான இவர் தொடர்பிலும் ஆக்கபூர்வமான விசாரணைகள் இடம்பெறவில்லையென்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறோம்.

இதேவேளை, பாலியல் இலஞ்சம் கோரிய திவிநெகும சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் கடந்த வாரம் 20 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது. ஏழு வயது குழந்தையின் சிறுநீரக அறுவைச்சிகிச்சைக்காக அரசாங்கத்திடமிருந்து வழங்கப்படும் நிதியுதவியைப் பெறுவதற்குத் தேவையான அனுமதியை வழங்குவதற்காக 30 வயதுடைய மூன்று குழந்தைகளின் தாயிடம் இந்த இலஞ்சம் கோரப்பட்டது.

குற்றவாளியின் வாக்குரிமை உட்பட சிவில் உரிமைகள் இரத்துச் செய்யப்படுவதாகவும் இதனைத் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். மேலும், பிரதிவாதிக்கு 20,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பை வழங்கிய மேல்நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே, அரச உத்தியோகத்தராக இருந்துகொண்டு, இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் கோரியது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று குறிப்பிட்டார். இந்தக் குற்றத்தின் தீவிரத்தன்மையைக் கருத்திற்கொண்டு, லேசான தண்டனை விதிக்க முடியாதென்றும் அதன்படி இந்தத் தண்டனை விதிக்கப்படுவதாகவும் நீதிபதி தெரிவித்தார்.

2015 மார்ச் 31 அன்று சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட தனது ஏழு வயதுக் குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்ய அரசாங்கத்தின் நிதியுதவியைப் பெறுவதற்கு அனுமதி வழங்குவதற்காக மூன்று குழந்தைகளின் தாயிடம் பாலியல் இலஞ்சம்கோரி அவரை திஸ்ஸமஹாராம பகுதியிலுள்ள விடுதியொன்றுக்கு அழைத்துச் சென்றபோது பிரதிவாதி இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் இந்தச் சந்தேக நபருக்கெதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

நீண்ட விசாரணைகளுக்குப் பிறகு தீர்ப்பை வழங்கிய மேல்நீதிமன்ற நீதிபதி, முறைப்பாட்டாளரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்துக்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக உத்தரவிட்டார். அதன்படி, இந்தத் தண்டனை விதிக்கப்படுவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

அரச சேவையில் பணிபுரிந்து சமூகத்துக்கே முன்மாதிரியாக இருக்கவேண்டியவர்கள் இப்படி வேலியே பயிரை மேய்ந்தது போல செயற்படுவது தொடர்பில் மேல்நீதிமன்றம் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பே மேற்படி பாதிக்கப்பட்ட மாணவியின் வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்படுவோருக்கும் வழங்கப்படவேண்டும். இப்படியானவர்களுக்கு வழங்கப்படும் தீர்ப்பு, சமூகத்தில் இனி எவரும் அவ்வாறான தவறைச் செய்யத் துணியாதளவுக்கு அமைய வேண்டும்.

கொட்டாஞ்சேனை மாணவி விடயத்தில் தற்போதைய அரசு மிகவும் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதால் நீதித்துறையே இதற்கு சரியான தீர்வை வழங்க வேண்டும். சிறுமியின் மரணத்தால் துயருற்றிருக்கும் மாணவியின் குடும்பத்தினர் நேரடியாக அமைச்சுக்கு வரவேண்டுமென்கிறார் மகளிர் விவகார அமைச்சர். அதுமட்டுமல்ல, மாணவி மனநோய்க்கு சிகிச்சை பெற்றதாகவும் அமைச்சர் குறிப்பிடுகிறார். பாலியல் வன்கொடுமை செய்த ஆசிரியருக்கு அப்பால் மாணவிக்கு மன உளைச்சலைத் தந்ததாகச் சொல்லப்படும் கொட்டாஞ்சேனை தனியார் வகுப்பு உரிமையாளர் பற்றி பொலிஸார் கண்டுகொள்வதே இல்லை. ஆனால், அவர் சி.ஐ.டியிடம் செய்த முறைப்பாடு தொடர்பில் வெளிவந்த செய்திகளை தேசிய மக்கள் சக்தி தனது உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களில் வெளியிட்டு மகிழ்கிறது. அப்படியாயின், எப்படி இவர்களிடமிருந்து நீதியை எதிர்பார்க்கலாம்?

கொட்டாஞ்சேனை மாணவிக்கு நடந்த துயரம் இன்னுமொருவருக்கு ஏற்படக்கூடாதென்பது பெற்றோர்களின் அவா. மாணவியின் குடும்பத்துக்கு நீதி கிடைக்கவும் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்கவும் நீதித்துறை இவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும். அந்த நீதி தாமதிக்கப்படும் நீதியாக இருக்கவும் கூடாது.




சர்வதேச தாதியர் தினம் (12) இன்றாகும். சுகாதார சேவையின் மகத்துவம் அன்றும் இன்றும் மிக முக்கிய சேவையாக ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. புளோரன்ஸ் நைட்டிங்கேல் (Florence Nightingale) அறிமுகப்படுத்திய தாதிச் சேவை, உலக உயிர்வாழ்வுக்கான இன்றியமையாத காரணியாக அமைந்துள்ளமையே அதற்கான காரணமாகும்.

நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த Florence Nightingaleஇன் பிறந்த நாளான மே 12ஆம் திகதியை சிறப்பாக நினைவுகூரும் வகையில் இன்றைய நாளில் சர்வதேச தாதியர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

1899ஆம் ஆண்டில் சர்வதேச தாதியருக்கான பேரவை எடுத்த தீர்மானத்துக்கமைவாக ஆண்டு தோறும் மே மாதம் 12 ஆம் திகதியை சர்வதேச தாதியர் தினமாகக் கொண்டாடுகின்றோம்.

1939ஆம் ஆண்டு முதல் முறையான தாதியர் சேவையை ஸ்தாபித்ததன் மூலம் நோயுற்றவர்களை இரவும் பகலும் கவனித்துக்கொள்ளும் தாதியர்களின் தலைமுறையைக் கௌரவிக்கும் வகையில் இலங்கையும் தாதியர் தினத்தைக் கொண்டாடுகின்றது.

தங்கள் உயிரைப் பணயம் வைத்து கொரோனா தொற்றுக்கெதிரான போராட்டத்தில் தாதியர் தமது உன்னத சேவையை நாட்டுக்கு வழங்கியமையை எம்மால் மறந்துவிட முடியாது.

கடமைக்கு அப்பாற்பட்ட மனிதாபிமானத்துடன் கூடிய இதயத்துடன், இந்நாட்டிலுள்ள சுமார் 36,000 தாதியர்கள் ஓய்வின்றி தமது சேவையைத் தொடர்கின்றனர்.

நோயாளர்களைக் குணப்படுத்தி, அவர்களை அரவணைத்து, அவர்களுக்கு புத்துயிரளிக்கும் அளப்பரிய பணியை மேற்கொள்ளும் அனைத்து தாதியருக்கும் வாழ்த்துகள்.

# இந்திரா காந்தி

## 1971 இந்தியா - பாகிஸ்தான் போரை எவ்வாறு கையாண்டார்?

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் நிறுத்தம் மே 10ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக இரு நாடுகளுக்குமிடையே மோதல் நிலவி வருகிறது. இரு நாடுகளின் இராணுவங்களும் தாக்குதல்களை முறியடித்து வருவதாக பரஸ்பரம் கூறிவருகின்றன.

எல்லையின் இரு புறங்களிலும் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான படங்கள் மற்றும் காணொளிகள் வெளியாகி வருகின்றன.


அட்மிரல் எஸ்.எம். நந்தா மற்றும் இந்திரா காந்தி

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானில் இந்திய இராணுவத்தின் ஆபரேஷன் சிந்தூர் மற்றும் அதைத்தொடர்ந்து பாகிஸ்தானின் குண்டுவீச்சுத் தாக்குதல் ஆகியவற்றால் இரு நாடுகளுக்குமிடையே மோதல் போக்கு அதிகரித்து வருகிறது.

இதைத்தொடர்ந்து மே 10 ஆம் திகதி மாலை 05 மணியளவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக ஊடக தளத்தில், "அமெரிக்காவால் மத்தியஸ்தம் செய்யப்பட்ட நீண்டநேர பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இரு நாடுகளும் முழுமையான மற்றும் உடனடியான போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன என அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்" - எனப் பதிவிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்பந்தம் குறித்த அறிவிப்பை வெளியிட்டன.

மே 06ஆம் திகதி நள்ளிரவில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தானால் நிர்வகிக்கப்படும் காஷ்மீரில் ஒபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் சில இலக்குகளைத் தாக்கியதாக மே 07ஆம் திகதி இந்திய இராணுவம் அறிவித்தது.

இத்தகைய சூழ்நிலையில், நான்கு தினங்களுக்குள் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து சமூக வலைத்தளங்களில் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

இச்சூழலில், இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை காங்கிரஸ் மற்றும் அக்கட்சி ஆதரவாளர்கள், சில சமூக ஊடகப் பயனர்கள் குறிப்பிட்டு கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

### இந்திரா காந்தி குறித்து காங்கிரஸ் கூறியது என்ன?

காங்கிரஸின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்திலிருந்து இந்திரா காந்தி மற்றும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் ஆகியோரின் புகைப்படங்கள் பகிரப்பட்டிருந்தன.

அந்தப் புகைப்படங்களுடன் "இந்திரா காந்தி நிக்சனிடம் எங்கள் முதுகெலும்பு நேரானது. எந்தவொரு கொடுமையையும் எதிர்கொள்வதற்கான வளங்களும் திறனும் எங்களிடம் உள்ளன. மூன்று-நான்காயிரம் கிலோமீற்றருக்கப்பால் அமர்ந்துகொண்டு தங்களின் விருப்பத்தைப் பின்பற்றுமாறு உத்தரவிடும் காலம் போய்விட்டது எனக் கூறினார்"- எனப் பதிவிடப்பட்டிருந்தது.

காங்கிரஸ் அப்பதிவில், "இதுதான் தைரியம். இது இந்தியாவுக்காக உறுதியாக நிற்பதும் நாட்டின் மாண்புடன் சமரசம் செய்யாத செயலாகும்" - எனத் தெரிவித்தது.

காங்கிரஸ் மற்றும் சமூக ஊடகப் பயனர்கள் சிலர், குடிமைப் பணிகள் தேர்வுகளுக்கான பயிற்சியாளர் விகாஸ் திவ்யகீர்த்தியின் பழைய காணொளி ஒன்றையும் பகிர்ந்துவருகின்றனர்.

அந்தக் காணொளியில், "ஒரு பெண் பிரதமராகிறார், அவர் பாகிஸ்தானை இரு பாகங்களாகப் பிரிக்கிறார். மற்றவர்கள், சர்ஜிக்கல் ஸ்டிரைக் செய்வோம் எனத் தொடர்ந்து கூறிவருகின்றனர். அந்தப் பெண் பிரதமர் எதையும் சொல்லவில்லை. அவர் பாகிஸ்தானை இரண்டாகப் பிரித்தார்" - என விகாஸ் கூறுகிறார்.

எனினும், 1971 மற்றும் 2025 சூழல்களை ஒப்பிடுவது சரியல்ல என்று சிலர் நம்புகின்றனர்.

பாகிஸ்தானுடனான போருக்குப் பிறகு 1971இல் பங்களாதேஷ் உருவான போது சோவியத் ஒன்றியம் இருந்தது. ஆனால், 1991இல் சோவியத் ஒன்றியம் சிதைந்து, ரஷ்யா உருவானது. சோவியத் ஒன்றியத்துக்கிருந்த செல்வாக்கு ரஷ்யாவுக்கு இல்லை. இது இந்தியாவுக்கும் பின்னடைவாகப் பார்க்கப்பட்டது.

ஒருபுறம், சோவியத் ஒன்றியம் இந்தியாவுக்கு ஆதரவளித்தது, மறுபுறம் அச்சமயத்தில் பாகிஸ்தான் அணுசக்தி நாடு அல்ல.

ஹன்ஸ்ராஜ் மீனா சமூக ஊடகப் பக்கத்தில், "அமெரிக்காவிடமிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தன. களச்சூழல் கடினமானதாக இருந்தது. ஆனால், இந்திரா காந்தி பயப்படவில்லை. 1971இல் அவர் இந்தியாவின் மாண்பை மட்டும் காக்கவில்லை. பாகிஸ்தானைப் பிரித்து புதிய நாட்டை உருவாக்கி புதிய வரலாறும் படைத்தார். அவர் பிரதமர் மட்டுமல்ல, பேரார்வமும் நோக்கமும் கொண்டவர்" - எனப் பதிவிட்டிருந்தார்.

பத்திரிகையாளர் ரோகிணி சிங், "தேர்தலில் போராடுவதற்கும் போரில் சண்டையிடுவதற்கும் வித்தியாசம் உண்டு. யாரும் இந்திரா காந்தி போன்று எளிதில் ஆகிவிட முடியாது" - எனப் பதிவிட்டிருந்தார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தன் சமூக ஊடகப் பக்கத்தில் ஒரு கடிதத்தைப் பகிர்ந்து, "1971ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் திகதி அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி நிக்சனுக்கு இந்திரா காந்தி எழுதிய கடிதம் இது. பாகிஸ்தான் நான்கு தினங்களுக்குப் பிறகு சரணடைந்தது" - எனப் பதிவிட்டுள்ளார்.


இந்திரா காந்தி மற்றும் ரிச்சர்ட் நிக்சன்

இதுதொடர்பாக, பா.ஜ.கவின் தொழில்நுட்ப அணியின் தலைவர் அமித் மாள்வியா, "பாகிஸ்தான் இராணுவம் சரணடைந்ததுடன் 1971 போர் முடிவுக்கு வந்தது. ஆனால், அதைத் தொடர்ந்து சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் அழுத்தத்தால் சிம்லா ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது. எவ்வித வியூக நன்மையும் இல்லாமல் 99,000 போர்க் கைதிகளை இந்தியா விடுவித்தது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை விட்டு வெளியேறுவதற்கு எந்த நிபந்தனையும் முன்வைக்கப்படவில்லை, எல்லையும் முறையாக முடிவு செய்யப்படவில்லை. இந்தியா மீது சுமத்தப்பட்ட அகதிகள் நெருக்கடி மற்றும் போரால் ஏற்பட்ட இழப்பீடுகளுக்கான நிவாரணம் கோரப்படவில்லை. அந்தச் சமயத்தில் இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். உங்களின் வசதிக்கேற்ப விஷயங்களைக் கூறுவதை நிறுத்துங்கள்"- எனப் பதிவிட்டிருந்தார்.

### இந்திரா காந்தி - நிக்சன் சந்திப்பில் என்ன நடந்தது?

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் மற்றும் இந்திரா காந்திக்கிடையேயான கசப்பான உறவு அனைவரும் அறிந்ததே.

1967இல் டில்லியில் இந்திரா காந்தியை நிக்சன் சந்தித்தார். அப்போது வெறும் 20 நிமிடங்களில் நிக்சனுடன் இருந்த இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரியிடம், "இன்னும் இவரை நான் எவ்வளவு நேரம் பொறுத்துக்கொள்ள வேண்டும்?"- என இந்திரா காந்தி சலிப்புடன் கேட்டதாக, அவர் குறித்து எழுதப்பட்ட புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1971க்கு முன்பும் இருவருக்குமான உறவு இப்படித்தான் இருந்தது.

கிழக்கு பாகிஸ்தானில் நடைபெற்ற அத்துமீறல்கள் தொடர்பாக உலகின் கவனத்தை ஈர்க்க இந்திரா காந்தி 1971ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்கா சென்றார். அப்போது இந்திரா காந்தியை 45 நிமிடங்கள் காக்கச் செய்தார் நிக்சன்.

வெள்ளை மாளிகையில் அவர் ஆற்றிய வரவேற்புரையில், பிகாரில் வெள்ளத்தில் இறந்தவர்களுக்கு இரங்கலைத் தெரிவித்த நிக்சன், கிழக்கு பாகிஸ்தான் குறித்து குறிப்பிடவே இல்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்திய வெளியுறவுத் துறையின் மூத்த அதிகாரி மகாராஜ் கிருஷ்ணா ரஸ்கோத்ராவிடம் பி.பி.சி.செய்தியாளர் ரெஹான் ஃபசல் பேசினார்.

ரஸ்கோத்ரா பி.பி.சியிடம், "அச்சமயத்தில் நான் அங்கு இருந்தேன். இந்திரா காந்தியின் நிலையைக் காட்டுவதே நிக்சனின் நோக்கமாக இருந்தது. அவர் இந்திரா காந்தியை அவமானப்படுத்த நினைத்தார். ஆரம்பத்திலிருந்தே இருவருக்குமான உரையாடல் நன்றாக இல்லை" - எனக் கூறினார்.

மேலும் அவர், "இந்தியாவுக்கு அச்சமயத்தில் வந்த ஒரு கோடி பங்களாதேஷ் அகதிகள் குறித்தோ, அவர்கள் இந்தியாவுக்கு சுமையாக மாறியது மற்றும் அவர்கள் முகாம்களில் பசியால் வாடுவது பற்றியோ நிக்சன் ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை. நாங்கள் போரை அறிவிக்கத்தான் வந்திருக்கிறோம் என அவருக்கு சில சந்தேகங்கள் இருந்திருக்கலாம். இந்திரா காந்தியிடம் வெளிப்படையாகவே அவர் முறையற்ற வகையில் நடந்துகொண்டார்" - என்றார்.

இந்திரா காந்தி குறித்து பேசிய அவர், "இந்திரா காந்தி அதைப் பொருட்படுத்தவில்லை. அவர் மிகவும் மாண்புடைய பெண்மணி. நிக்சனிடம் என்ன சொல்ல வேண்டுமோ அதை அவர் சொல்லி விட்டார். கிழக்கு பாகிஸ்தானில் நடக்கும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும், இந்தியாவுக்கு அகதிகளாக வந்தவர்கள் மீண்டும் பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும். அவர்களுக்கு எங்கள் நாட்டில் இடமில்லை என்பதுதான் அவருடைய பேச்சின் சாராம்சம்" - என்றார்.

### 1971 போரும் அமெரிக்க கடற்படையும்

1971ஆம் ஆண்டு போரில் அமெரிக்கா தனது போர்க் கப்பலை வங்காள விரிகுடா நோக்கி அனுப்பியது.

இத்தாலிய பத்திரிகையாளர் ஒரியானா ஃபல்லாசிக்கு இந்திரா காந்தி பின்னர் அளித்த பேட்டியொன்றில், "அமெரிக்கா ஒரு துப்பாக்கிக் குண்டைச் சுட்டியிருந்தாலோ அல்லது வங்காள விரிகுடாவில் அமர்ந்திருப்பது தவிர வேறு ஏதேனும் செய்திருந்தாலோ, மூன்றாம் உலகப் போர் தொடங்கியிருக்கும். ஆனால், உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், ஒருமுறை கூட மனதில் எனக்கு அந்தப் பயம் தோன்றவில்லை" - என்றார்.

த மேன் ஊ போம்ப்ட் கராச்சி எனும் தன் சுயசரிதையில் அட்மிரல் எஸ்.எம் நந்தா, "டிசம்பர் முதல் வாரத்தில் மலாக்கா ஜலசந்தியிலிருந்து ஒரு சோவியத் போர்க் கப்பலும் ஒரு கண்ணிவெடி அகற்றும் கப்பலும் இந்தப் பகுதியை அடைந்தன. 1972ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் அமெரிக்க போர்க் கப்பல் இங்கிருந்து வெளியேறும் வரை சோவியத் கடற்படை அதைப் பின்தொடர்ந்தது" - எனக் குறிப்பிட்டுள்ளார்.

*- இது பி.பி.சிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு*

## இன்றைய நாளில்...

- 1922 – 20 தொன் நிறையுள்ள விண்கல் ஒன்று வேர்ஜீனியாவில் வீழ்ந்தது.
- 1937 – ஆறாம் ஜோர்ஜ் மற்றும் எலிசபெத் மகாராணி பிரித்தானியாவின் ஆட்சியாளர்களாக முடிசூடினர்.
- 1965 – சோவியத் ஒன்றியத்தின் லூனா-5 விண்கலம் சந்திரனில் மோதியது.
- 2008 – சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் 8.0 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 69,000 பேர் உயிரிழந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

***இந்தியா, பாகிஸ்தான் சண்டை வந்தால் மைசூர் பருப்பு, பம்பாய் வெங்காயம், காஞ்சிபுரம் பட்டு, திருநெல்வேலி அல்வா, திருப்பதி லட்டு எல்லாத்துக்கும் தட்டுப்பாடு வரும் என்னங்கோ?***



# அரச ஊழியர்களுக்கான இடர்காலக் கடன் தொகை 02 இலட்சத்திலிருந்து 04இலட்சம் ரூபாவாக அதிகரிப்பு

அரச ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் இடர்காலக் கடனை, 02 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 04 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2008.12.31ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 30/2008 மற்றும் 2025.03.22ஆம் தினத்தன்றான வரவு-செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் 04.4 ஆம் உபபிரிவுக்கு உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.


02. 2025 வரவு - செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களின் குறைந்தபட்ச அடிப்படை சம்பள அதிகரிப்பை கவனத்திற்கொண்டு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தற்போது காணப்படும் இடர்காலக் கடன் ரூபா 02 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 04 இலட்சம் ரூபாவரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி ஏற்பாடுகளின்படி, உத்தியோகத்தருக்கு உரித்தாகும் கடன் பணத்தினை தீர்மானிக்கும்போது உத்தியோகத்தரின் சம்பளமாக 2025.03.25ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025இன் அட்டவணை II இன் அடிப்படை சம்பளத்துக்குரியதாக்கி உத்தியோகத்தருக்கு அடுத்த பத்து மாதத்துக்கான சம்பளம் அல்லது ரூ.400,000 அல்லது இரண்டில் குறைந்த பணத்தை செலுத்த வேண்டும்.

அதன்படி, உத்தியோகத்தரொருவர் கடன் முற்பணத்தைப் பெற்றுக்கொள்ளும்போது கவனத்தில் எடுக்கப்படும் சம்பளத்தில் 40% எல்லையை கணீப்பீடு செய்யும் போது உத்தியோகத்தரின் சம்பளமாக 2025.03.25 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் II ஆம் அட்டவணையின் அடிப்படை சம்பளத்துக்கு உரித்தாக்கிக் கொள்ளல் வேண்டும்.

மேலும், இடர்காலக் கடன் பணத்தை மீள அறவிடும்போது அடிப்படையாகக் கொள்ள வேண்டிய சம்பளமாக 2025.03.25ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025 இன் II ஆம் அட்டவணையின் அடிப்படைச் சம்பளத்துக்கு உரித்தாக்கிக் கொள்ளல் வேண்டும்.

அங்கு, நிலவும் அதிகபட்ச எல்லையினை மீறிச் செல்லாத வகையில் மற்றும் ஆண்டுக்குள் கடன் வழங்குவதற்கு இயன்றவரையில், பொருத்தமான முதன்மை ஒழுங்குவரிசையை அவ் தாபனங்களின் மூலம் தயாரிக்கப்படல் வேண்டும்.



அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 12/2025

எனது இல : EST-6/04/LON/1030
பொது நிர்வாக, மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2025.05.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின்
பிரிவு 10 - இடர்க்காலக் கடன்

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2008.12.31 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 30/2008 மற்றும் 2025.03.22 ஆம் தினத்தன்றான வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் 04.4 ஆம் உபபிரிவிற்கு உங்களின் அவதானத்தை செலுத்துகின்றேன்.

02. 2025 வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களின் குறைந்தபட்ச அடிப்படை சம்பள அதிகரிப்பினை கவனத்திற் கொண்டு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தற்போது காணப்படும் இடர்க்காலக் கடன் ரூபா 250,000/- இருந்து ரூபா 400,000/- வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03. மேற்படி ஏற்பாடுகளின்படி, உத்தியோகத்தருக்கு உரித்தாகும் கடன் பணத்தினை தீர்மானிக்கும் போது உத்தியோகத்தரின் சம்பளமாக 2025.03.25 ஆம் தினத்தன்றான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 10/2025இன் அட்டவணை II இன் அடிப்படை சம்பளத்திற்குரியதாக்கி உத்தியோகத்தருக்கு அடுத்த பத்து மாதத்திற்கான சம்பளம் அல்லது ரூ. 400,000/- அல்லது இரண்டில் குறைந்த பணத்தினை செலுத்த வேண்டும்.

04. அதன்படி, உத்தியோகத்தரொருவர் கடன்/ முற்பணத்தினை பெற்றுக் கொள்ளும் போது கவனத்தில் எடுக்கப்படும் சம்பளத்தில் 40% எல்லையை கணிப்பீடு செய்யும் போது உத்தியோகத்தரின் சம்பளமாக 2025.03.25 ஆம் தினத்தன்றான

இவ் ஏற்பாடுகள் 2025.05.01ஆம் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

இச்சுற்றறிக்கை பொதுத் திறைச்சேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

# சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அரச நிறுவனங்களை நெறிப்படுத்த பிரதமரினால் மூவர் கொண்ட குழு நியமிப்பு



சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் குறித்து தலையிட வேண்டிய அரச நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுவதால் இந்த பொறிமுறையைக் கண்காணித்து, அதை நெறிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க, மூன்று பேர் கொண்ட குழு பிரதமரினால் நியமிக்கப்பட்டது.

கொட்டாஞ்சேனை சிறுமியின் மரணம் தொடர்பாக விசாரிக்கும் பொலிஸ் குழு மற்றும் சிறுமியின் பெற்றோருடனான கலந்துரையாடல் ஒன்று பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே குறித்த குழு நியமிக்கப்பட்டது.

இதன்போது பாடசாலை மற்றும் மேலதிக வகுப்பில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து பாரபட்சமற்ற, முறையான மற்றும் மிக விரைவான விசாரணையை நடத்துமாறு பிரதமர் பொலிஸ் விசாரணைக் குழுவுக்கு அறிவுறுத்தினார்.

இந்தச் சம்பவம் பதிவாகியது முதல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முறையாக இடம்பெற்றனவா என்பது குறித்து கல்வி அமைச்சின் மூலம் உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் இவர்களிடம் தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் குறித்து தலையிட வேண்டிய அரச நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது என்றும் துஷ்பிரயோகத்துக்கு ஆளான பிள்ளைக்கு நேர்மறையான பதில் வழங்கப்படுவதில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளமையினால், இந்த பொறிமுறையைக் கண்காணித்து, அதை நெறிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க, சிறுவர் நல மருத்துவ நிபுணர் வைத்தியர் அஸ்வினி பெர்னாண்டோ தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு பிரதமரினால் நியமிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# இலங்கையிலிருந்து முதலாவது ஹஜ் குழு சவூதி அரேபியாவுக்கு புறப்பட்டது





(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையிலிருந்து முதலாவது ஹஜ் குழு நேற்று (11) அதிகாலை 02 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து சவூதி அரேபியாவுக்கு புறப்பட்டுச் சென்றார்கள்.

இந்நிகழ்வில் சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்த்தானி கலந்துகொண்டதுடன், அவருடன் மேல்மாகாண ஆளுநர் ஹனீப், பிரதியமைச்சர் முனீர் முளாஃபர் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் எம்.வை.எம்.நவவி, முஸ்லிம் சமய பண்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், ஹஜ் கமிட்டியின் தலைவர் றியாஸ் மிஹ்லார், ஹஜ் முகவர் றிஸ்மி ரியால் மற்றும் எம்.ரீ.கரீம் உட்பட டுபாய் அரப் ஏயார் விமான முகாமையாளர்கள், திணைக்களத்தின் அதிகாரிகள், எம்.எம்.எம்.முப்பி மற்றும் கே.ஏ.சப்றி உட்பட பலரும் கலந்துகொண்டனர். மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இம்முறை ஹாஜிகளுக்கு சகல வசதிகளும் சவூதி அரேபியாவில் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையிலிருந்து 3500க்கும் மேற்பட்ட ஹாஜிகள் இம்முறை ஹஜ்ஜுக்குச் செல்வதாக இந்நிகழ்வில் கலந்துகொண்ட சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானி தெரிவித்தார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## 10 நாட்களில் 1,669 பேர் அடையாளம்



நாட்டில் இந்த ஆண்டு இதுவரை மொத்தம் 19ஆயிரத்து 215 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு (NDCU) உறுதிப்படுத்தியுள்ளது.

ஜனவரி மாதத்தில் 4,936 பேரும் பெப்ரவரியில் 3,665 பேரும் மார்ச் மாதத்தில் 3,770 பேரும் ஏப்ரல் மாதத்தில் 5,175 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த மாதத்தின் முதல் 10 நாட்களில், 1,669 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

10 மாவட்டங்கள் அதிக ஆபத்துள்ள டெங்கு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இந்த ஆண்டு கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, மட்டக்களப்பு, திருகோணமலை, கண்டி, மாத்தளை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் இருந்து அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், சுகாதார அதிகாரிகள் தங்கள் வீடுகளில் உள்ள நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களையும் அழிக்குமாறு பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

# 05 கிலோ தங்கம் தருவதாகக்கூறி 20கோடி ரூபா வரை பணம் கொள்ளை

## கம்பளையில் வர்த்தகரை ஏமாற்றிய குழு கைவரிசை





சம்பவம் இடம்பெற்ற வர்த்தகரின் வீடு



(கலஹா செய்தியாளர்)

கம்பளை உடுநுவர வெலம்பொட பிரதேசத்தைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகரிடம் 28 கோடி ரூபா பணத்துக்கு ஐந்தரை கிலோகிராம் தங்கம் தருவதாகக்கூறி 20 கோடியே 85 இலட்சம் ரூபாவை கொள்ளையிட்ட குழுவை கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வெலம்பொட பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி தங்க பரிவர்த்தனை குறித்து இங்கிலாந்தில் வசிக்கும் நபர் ஒருவர் மூலம் பல மாதங்களாகப் பேரம் பேசப்பட்டு பின்னர் தங்கத்தின் மாதிரியைக் காட்டிய பிறகு, 10 பேர் கொண்ட குழுவினர் வியாபாரத்தை முடிக்க கடந்த வெள்ளிக்கிழமை (09) தொழிலதிபரின் வீட்டுக்கு வந்துள்ளனர். அங்கு நடந்த இரகசியப் பேச்சுவார்த்தையில் தங்கம் ஒரு மீன் லொறியில் மறைத்து கொண்டு வரப்படும் என்றும் அச்சந்தர்ப்பத்தில் தொழிலதிபரும் அவரது மூத்த மகனும் மட்டுமே வீட்டில் இருந்தால் போதுமெனவும் சந்தேக நபர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

அதன்படி, வந்த குழுவில் மூன்று பேர் தொழிலதிபருக்குச் சொந்தமான வீட்டில் இருந்துள்ளதோடு, ஏனையவர்கள் வர்த்தகருக்கு சொந்தமான பிறிதொரு வீட்டுக்கு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்துக்குச் சென்றவுடன் குறித்த குழுவினர் தொழிலதிபரையும் அவரது மகனையும் கை கால்களை கட்டியும் வாயில் பிளாஸ்டர்களை கொண்டு ஒட்டியும் அடித்து அறைகளுக்குள் தள்ளி, பூட்டிவிட்டு, அவர்களிடமிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு வாகனத்தில் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்நிலையில் வர்த்தகரின் வீட்டிலிருந்த மூவரின் நடத்தை சந்தேகத்துக்குரியதாக மாறியதால், தொழிலதிபரின் வீட்டிலிருந்த ஏனையவர்களால் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

இதற்கிடையில், தொழிலதிபரும் அவரது மகனும் கட்டினை அவிழ்த்துக்கொண்டு சம்பவம் குறித்து தங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து பிடித்து வைத்திருந்த சந்தேக நபர்கள் மூவரையும் கொண்டுசென்று சம்பவம் குறித்து வெலம்பொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேகநபர்கள் மூவரில் ஒருவர் இங்கிலாந்தில் இருந்து தொடர்புகொண்ட நபரின் உறவினர் என்பதும், அவர் கொழும்பு, ராகம பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் தெரியவந்துள்ளதோடு, சந்தேக நபர்கள் பயணித்த காரும் கண்டி பல்லேகல மற்றும் பொல்கஸ்சோவிட்ட பிரதேச நபர்கள் வந்த முச்சக்கரவண்டியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, ஏனைய சந்தேக நபர்கள் தங்காலை அல்லது கதிர்காமம் பகுதிகளுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர், இதுகுறித்து நாடு முழுவதும் உள்ள பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளதோடு, சந்தேக நபர்கள் வெளிநாடுகளுக்குச் தப்பிச்செல்வதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் குறித்த வர்த்தகருக்கு இவ்வளவு பெரியதொகை பணம் எப்படி வந்தது என்ற விசாரணைகளையும் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். முதற்கட்ட விசாரணையில் ஒரு தனியார் வங்கியில் அவரது நண்பர் மூலமாக 15 கோடி ரூபாவும் மாவனெல்லை நகைக்கடை உரிமையாளரிடமிருந்து ஒரு கோடி ரூபா வாங்கியதாகவும் அதற்கு பதிலாக தங்கப் பொருட்களை அந்தக் கடைக்கு வழங்குவது குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

மேலும், தமது தங்க நகைகளை அடகு வைத்து ஏழு கோடி ரூபாவையும் தனது சகோதரரிடமிருந்து ஐந்து கோடி ரூபாவையும் தனது மகனிடமிருந்து ஒரு கோடி ரூபாவையும் தனது ஜீப் வண்டியை அடகு வைத்தும் பெற்றதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த தொழிலதிபருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளதென விசாரணைகளில் தெரியவருகிறது.

மேற்படி வீட்டின் முன்னாள் உரிமையாளரான பிரபல தொழிலதிபரும் கொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுதத் மாரசிங்க மற்றும் கண்டி பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்க ஆகியோரின் ஆலோசனையின் பேரில் வெலம்பொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நளின் அசோக் குணவர்தன தலைமையிலான பொலிஸ் குழுவும் கம்பளை பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் சம்பிக விமலரத்ன தலைமையிலான குழுவும் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதியுதவியில் மன்னாரில் பனைசார் உற்பத்திப் பயிற்சிநெறி



(சாவகச்சேரி நிருபர்)

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதி உதவியில் மன்னாரில் பனை சார் உற்பத்திப் பயிற்சிநெறி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறியினை பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் மற்றும் மன்னார் நகர் பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்திருந்தனர்.

மேலும் மன்னார் மாவட்ட பனை அபிவிருத்திச்சபை முகாமையாளர், பனை அபிவிருத்திச்சபையின் போதனாசிரியர்கள் மற்றும் சுபகாந்தா நிறுவன பணிப்பாளர் இதன்போது கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்ட பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்;

இவ்வாறான பயிற்சிநெறிகள் பனை சார்ந்த தொழிலாளர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த உதவும். பனைசார் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகள் அதிகரித்து வரும் நிலையில் இவ்வாறான பயிற்சிகள் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு சிறந்ததொரு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கும்.


பனை சார்ந்த உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ்வேளையில் இவ்வாறான ஊக்குவிப்புத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். மன்னார் மாவட்டத்தில் இருந்து சிறந்த பனைசார் உற்பத்திகள் கிடைக்கின்றன.

அதனடிப்படையில் மன்னாரின் தனி அடையாளத்துடன் அந்த உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# கட்டார் நாட்டுக்கான முன்னாள் தூதுவர் யூசுப் காலமானார்

(மாவனல்லை செய்தியாளர்)

மாவனெல்லை அங்வாரத்தைச் சேர்ந்த கட்டார் நாட்டுக்கான இலங்கை முன்னாள் தூதுவரான சட்டத்தரணி ஏ.எல்.எம்.யூசுப் தனது 91ஆவது வயதில் காலமானார்.



மாவனல்லை கிருங்கதெனிய மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல் பரிபாலன சபை உட்பட பல சமூக சேவை பணி செய்த இவர் வறிய மாணவர்களின் கல்விப் பணிக்காக மாதாந்த நிதி ஒத்துழைப்புகளை வழங்கி வந்துள்ளார். மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி, சாஹிரா தேசிய கல்லூரி, மயுரபாத தேசிய கல்லூரி என்பவற்றுக்கு பல உதவிகளை செய்துள்ளார்.

சமூக சேவையாளரான இவர் பெரிஸ்டர் ஹாசிமின் சகோதரரும் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஸிமின் சித்தப்பாவும் ஆவார். ஸீனா, சுரையா ஆகிய இரு பெண் பிள்ளைகளின் தந்தையான இவரின் சடலம் நேற்று (11) கிருங்கதெனிய மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாசல் மையவாடியில் மஃரிப் தொழுகையோடு நல்லடக்கம் செய்யப்பட்டது.

# ஜனாதிபதி அநுரவின் பங்கேற்புடன் அரச வெசாக் விழா நுவரெலியாவில் ஆரம்பம்



2569 ஸ்ரீ பௌத்த வருடத்தின் அரச வெசாக் விழா, மூன்று நிகாயாக் களின் தேரர்கள் மற்றும் ஜனா திபதி அநுரகுமார திசாநா யக்கவின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் (10) நுவரெலியா சர்வதேச பௌத்த நிலைய விகாரை யில் ஆரம்பிக்கப்பட்டது.

'பஜெத மித்தே கல்யாண - பஜெத புரிசுத்தமெ' (நற்குணங்கள் கொண்ட உன்னத நண்பர்களுடன் பழகுவோம்) எனும் தொனிப்பொருளில் நடைபெறும் இம்முறை அரச வெசாக் விழா, மே மாதம் 10ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரை நுவரெலியா மாவட்டத்தை மையமாகக்கொண்டு நடைபெறும்.

மகாநாயக்க தேரர்கள், அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் அறிவுறுத்தல்களின்படி ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, பௌத்த அலுவல்கள் திணைக்களம், மத்திய மாகாண சபை மற்றும் நுவரெலியா மாவட்ட செயலகம் ஆகியவை இணைந்து அரச வெசாக் விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

மேலும், நேற்று முன்தினம் (10) முதல் 16 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்தி, அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்துக்கேற்ப மக்களின் ஆன்மீக வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக பல்வேறு பௌத்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இந்தக் காலப்பகுதியில் நுவரெலியா மாவட்டத்தில் தற்போது முடிக்கப்படாத விகாரைகளின் அபிவிருத்திப் பணிகளை முப்படைகளின் உதவியுடன் நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், அரச வெசாக் விழாவுடன் இணைந்து மக்களிடையே ஆன்மீக வளர்ச்சி யையும் பௌத்த மத விழிப்புணர்வையும் வளர்க்கும் வகையில் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தின் மூலம் பல விசேட நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

பன்முக மத மற்றும் பன்முக கலாசார சமூகத்தைக் கொண்ட நுவரெலியா மாவட்டத்தில் இந்த ஆண்டு அரச வெசாக் விழாவை ஏற்பாடு செய்வது சிறப்பு நிகழ்வாக உள்ளதோடு, நாடு முழுவதும் பௌத்த மறுமலர்ச்சியை உருவாக் குவதும் உலகெங்கிலுமுள்ள பௌத்த நாடுக ளுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

2025 பௌத்த வருட அரச வெசாக் விழாவைக் குறிக்கும் வகையில் நினைவு முத்திரையும் இங்கு வெளியிடப்பட்டதுடன், அதன் முதல் நினைவு முத்திரை ஜனாதிபதிக்கு வழங் கப்பட்டது.

மேலும், 2025 ஆம் ஆண்டு அரச வெசாக் விழாவுக்கிணையாக கொத்மலை மலியதேவ ரஜமஹா விஹாரையை புனித பூமியாக அறிவிக்கும் ஸ்ரீ சன்னஸ் பத்திரத்தை வழங்குதல் மற்றும் குருநாகல் ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தை புனித பூமியாக அறிவிக்கும் ஸ்ரீ சன்னஸ் பத்திரத்தையும் ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

சியாமோபாலி மகா நிகாயாவின் மல்வத்து மகா விகாரைப் பிரிவின் பிரதம பதிவாளர், சோமாவதி ரஜமஹா விகாரையின் விகாராதிபதி, கலாநிதி வண. பஹமுனே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரர், சியாமோபாலி மகா நிகாயாவின் அஸ்கிரி மகா விகாரைப் பிரிவின் அனுநாயக்க வண. ஆனமடுவே தம்மதஸ்ஸி நாயக்க தேரர் உட்பட மூன்று நிகாயாக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மகாசங்கத்தினர், அகில இலங்கை சாசனாரக்ஷக சபைத் தலைவர் பேராசிரியர் வண. தும்புல்லே சீலக்கந்த நாயக்க தேரர், அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் பிரதான பதிவாளர் வண. முகுனுவல அனுருத்த நாயக்க தேரர் உள்ளிட்ட அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் மகாசங்கத்தினர் மற்றும் அனைத்து மதத்தலைவர்கள், சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி உட்பட அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, அரச அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் உட்பட பெருந்திரளான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



பொகவந்தலாவை முத்துலெட்சுமி தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டல பூர்த்தி இறுதி நிகழ்வான தீர்த்தோற்சவ நிகழ்வு நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது.

# பொதுவான கோட்பாட்டுக்கு இணங்கி ஆதரவளியுங்கள்

## தமிழ்க் கட்சிகளிடம் கோருகிறார் சுமந்திரன்



(சி.திவியா)

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக்கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்கக் கூடிய ஓர் உரிமை பொதுவாக இருக்கும். அந்தக் கோட்பாட்டுக்கு இணங்கி ஆதரவளிக்குமாறு தமிழ்க் கட்சிகளிடம் விநயமாகக் கோருவதாக தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று (10) இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

''உள்ளூராட்சித் தேர்தலில் 58 சபைகளில் போட்டியிட்டோம். ஆகக் குறைந்தது 35 சபைகளில் நாம் தனிப்பெரும் கட்சியாக உறுப்பினர்களைப் பெற்றுள்ளோம். ஆறு சபைகளில் அறுதிப் பெரும்பான்மையோடு வெற்றி பெற்றிருக்கிறோம். அந்தச் சபைகளில் தவிசாளர், உபதவிசாளரைத் தெரிவு செய்யும் பொறுப்பு கட்சிக்கு மட்டுமே இருக்கும். கட்சி சார்ந்து பொதுச் செயலாளர் அந்தப் பெயர்களை அனுப்பி வைப்பார். எமக்காக வாக்களித்த மக்களின் நம்பிக்கை வீண் போகாது. நாம் பொறுப்பெடுக்கும் சபைகளைத் திறமையுடனும் நேர்மையுடனும் நிர்வகிப்போம்.

ஒரு சபையில் குறித்த ஒரு கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் இருந்தால் அந்தக் கட்சிக்கு நிர்வாகத்தை அமைக்கக்கூடிய ஓர் உரிமை பொதுவாக இருக்கும்.

அந்த வகையில், இந்த 35 சபைகளுக்குமான தவிசாளர், உபதவிசாளர்களை நாங்கள் முன்னிறுத்துவோம்.

மற்றைய கட்சிகள் இந்தப் பொதுவான கோட்பாட்டுக்கு இணங்கி நாம் முன்னிறுத்துகின்ற வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டுமென்று தன்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். சில சபைகளில் விதிவிலக்கு ஏதுமிருந்தால் அது தொடர்பில் ஆராய்வோம். பொதுவான வகையில் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளோம். யாழ். மாநகரசபைக்கும் இது பொருந்தும்.

விசேடமாக நாங்கள் கேட்டுக்கொள்வது தமிழ்க் கட்சிகளையே. அந்தக் கட்சிகள் இந்த உடன்பாட்டுக்கு வருவது நல்லதென்பது எமது விநயமான வேண்டுகோள். முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பேசும் கட்சிகளோடும் நாம் இணங்கியே செயற்படுவோம்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை இந்தத் தேர்தலில் நாம் விமர்சித்ததாக எனக்கு நினைவில்லை. அவர்களும் எங்களை விமர்சித்ததாக ஞாபகமில்லை. சில கட்சிகள் எங்கள் மீது பாரதூரமான விமர்சனங்களை முன்வைக்கும்போது அதற்கான பதில்களையே வழங்கியிருந்தோம்.

தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான கூட்டு தொடர்வது நல்லதென்பது எமது சிந்தனை. காலப்போக்கில் அதனைத் தீர்மானிப்போம். எனவே, இந்த முயற்சி அப்படியான ஒரு போக்குக்கும் வழிவகுக்கலாம்.

வவுனியாவில் எமது கட்சி பின்னடைந்துள்ளதென்று கூறுவது ஒரு மாயை. கடந்த தேர்தலில் எமது கட்சிக்கு கிடைத்த வாக்குகளை விட இந்தத் தேர்தலில் வவுனியாவில் கூடுதலான வாக்குகள் கிடைத்துள்ளன. அது பின்னடைவு அல்ல. திடீரென்று வானைத்தொட முடியாது. நாங்கள் சீலிங்கை தொட்டுவிட்டோம். இனி மேலே போவோம்''- என்றார்.



குரு மாற்றத்தை முன்னிட்டு கொழும்பு புதுச்செட்டித் தெரு சத்குரு சாயி நாதனின் சந்நிதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) விசேட பூஜையும் பிரார்த்தனையும் நடைபெற்றன. இதன்போது, பிரம்மஸ்ரீ சுவாமிநாத சர்மா தீபாராதனை செய்வதைப் படத்தில் காணலாம்.



வட கிராண்ட்பாஸ், கொழும்பு - 14, நவகம்புர அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபையின் புதிய நிர்வாகக்குழு ஆலய அறங்காவலர் திருப்பணி வேந்தன் கே.சேவுகன் தலைமையில் நடைபெற்றது. இந்த முதல் கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழுத் தலைவர் வாசுதேவன், செயலாளர் ராகுலன், பொருளாளர் முருகன், உபதலைவர் ஜெயலத், உப செயலாளர் திருச்சந்திரன், இணைச் செயலாளர் வினோத் குமார், உப பொருளாளர் ரஞ்சித்குமார் ஆகியோர் உட்பட அங்கத்தவர்கள் சிலர் கலந்துகொண்டதைப் படத்தில் காணலாம்.

# குருந்தூர்மலைப் பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழர்கள் மூவர் கைதுசெய்யப்பட்ட விவகாரம்

## அடாவடித்தனங்களை உடனடியாக நிறுத்தவேண்டும் என்கிறார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைக் காகப் பண்படுத்தல் செயற்பாட்டில் தமிழ் மக்கள் ஈடுபட்டபோது கல்கமுவ சாந்தபோதி தேரர், தொல்லியல் திணைக்களத்தினரின் முறைப்பாட் டுக்கமைய முல்லைத்தீவு பொலிஸார் தமிழ் மக்கள் மூவரை நேற்று முன்தினம் (10) கைதுசெய் துள்ளனர்.

இந்நிலையில், இவ்வாறு கைதுசெய்யப்பட்ட மூவரையும் விடுவிக்கக் கோரி வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரை ராசா ரவிகரன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கலந்துரையாடியுள்ளதுடன் தமிழ் மக்கள் தமது பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் சுதந்திரம் மறுக்கப்படக்கூடாதெனவும் இத்தகைய அடாவ டித்தனமான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப் படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைப் பகுதியில் தமது வயல்காணிகளைப் பண்படுத்தும் நடவ டிக்கையில் ஈடுபட்ட சாமித்தம்பி ஏகாம்பரம், சிறீரத்தினம் கஜரூபன், வரதன் இளமாறன் ஆகிய மூவர் நேற்று முன்தினம்(10) கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

தொல்லியல் திணைக்களத்தின் எல்லைக்கல் இடப்பட்ட பகுதிகளுக்குள் பண்படுத்தல் செயற் பாடு மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே குறித்த மூவரும் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தை அறிந்தவுடன் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ்நிலையத்துக்கு சென்று கைதுசெய்யப்பட்ட மூவருடனும் கலந்துரை யாடியிருந்தேன்.

அத்துடன், பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடியதில் தமக்கு வவுனியாவில் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும் தொல்லியல் திணைக்களத்தின் பகுதிக்குள் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டதற்காகவே தம்மால் குறித்த மூவரும் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இருப்பினும் இந்தக் காணிகள் அனைத்தும் அந்த மக்களுக் குரிய காணிகள் என்பதை பொலிஸ் பொறுப்பதிகாரிக்குத் தெளிவுபடுத்தினேன்.



ஏற்கனவே மக்கள் பயிர்ச்செய்கை மேற் கொண்ட காணிகளில், மக்களைத் தொடர்ந்து பயிர்ச்செய்கை மேற் கொள்ளவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கும் சீர்கேடான செயற்பாடுகளே இங்கு இடம்பெற்று வருகின்றன என்பதையும் பொலிஸ் பொறுப் பதிகாரியிடம் தெரிவித்தேன்.

இந்த விடயத்திலே தொல்லியல் திணைக்களமா னது தமது எண்ணத்துக்கு ஏற்றவாறு எல்லைக்கற் களையிட்டு இக்காணிகளை அபகரித்து வைத்தி ருந்தால் மக்கள் எங்கே விவசாயம் செய்வது?

மக்கள் தமது காணிகளுக்குள் சுதந்திரமாகச் சென்று பயிர்ச்செய்கை செய்வதற்கான அவர்களது சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளே இந்த நாட்டில் தற்போது இடம்பெறுகின்றது.

இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளில் வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அதிகாரசபை உள்ளிட்ட அரச இயந்திரங்களால் தமிழ் மக்களின் காணிகளைத் தொடர்ந்து பறித்துக்கொண்டிருக்கும் செயற்பாடு நிறுத்தப்படவேண்டுமென்றுதான் நான் அரசாங்கத்தைக் கோருகின்றேன் - என்றார்.

மேலும், கைதுசெய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விடுவிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்''- என்றார்.

# மாற்றுத்திறனாளி குடும்பத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் புதிய வீடு!

(பு.கஜிந்தன்)

வவுனியா வடக்கு கனகராயன் குளம், பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியின் குடும்பமொன்றுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வீடொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டது.

தங்கோடை காரைநகரைச் சேர்ந்த அமரர்களான கனகலிங்கம் - பத்மாவதி நினைவாக அவர்களின் குடும்பத்தினரால் வழங்கப்பட்ட ரூபா 19,50,000 நிதியில் குறித்த வீடு இவ்வாறு அமைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த வீடானது நேற்று (11) மதியம் சுப நேரத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், வீட்டுத்திட் டத்துக்கான நிதிப்பங்களிப்பாளர் ஆகியோரால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

# ஜனாதிபதி அலுவலக அதி சொகுசு வாகன ஏலத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பம்

ஜனாதிபதி அலுவலகத்தின் அதி சொகுசு வாகன ஏலத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்துக்குரிய 27 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான இரண்டாம் கட்டத்தின் கீழ் விலைமனுக் கோரப்பட்டுள்ளது.

விற்பனைக்குள்ள வாகனங்களில் 1991முதல் 2016வரை பல்வேறு ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட வாகனங்கள் இதில் அடங்கும்.

இந்த வாகனங்களில் இரு BMW வாகனங்கள், 02 போர்ட் எவரெஸ்ட் ஜீப்கள், ஒரு ஹூண்டாய் டெரகன் ஜீப், இரு லேண்ட் ரோவர் ஜீப்கள், மிட்சுபிஷி மொன்டெரோ -01, 03 நிசான் பெற்றோல் வகை வாகனங்கள், 02 நிசான் கார்கள், ஒரு போர்ஷே (Porsche) கெய்ன் கார், 05 சாங்யோங் ரெக்ஸ்டன் ஜீப்கள், லேண்ட் குரூசர் சஹாரா ரக ஜீப் - 01, 06 வீ 8 ஜீப் மற்றும் மிட்சுபிஷி ரோசா குளிரூட்டப்பட்ட பஸ் ஒன்றும் அடங்கும்.

இது தொடர்பான டெண்டர் ஆவணங்களை மே 14ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை ஜனாதிபதி செயலக செமா கட்டிடத்தின் 2ஆவது மாடியில் உள்ள நிதிப்பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மே 14 ஆம் திகதி வரை, இலக்கம் 93, ஜாவத்தை வீதியில் அமைந்துள்ள சலுசல நிறுவன வளாகத்தில் இந்த வாகனங்களைப் பரீட்சிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அதி சொகுசு வாகன ஏலத்தின் முதல் கட்டத்தின் கீழ் முன்னதாக, 14 சொகுசு வாகனங்கள், பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட 06 வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் ஏலத்தில் விடப்பட்டன.

அரசாங்க செலவினங்களைக் குறைத்து நிதிப் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த வாகனங்களை விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது. முதற்கட்ட ஏலத்தில் 09 டிபெண்டர் ரக ஜீப்கள் உட்பட பல்வேறு வகையான 15 வாகனங்கள் விற்கப்பட்டன.

இந்த வாகனங்கள் ஜனாதிபதி செயலகத்தின் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் அல்ல என்பதோடு அரசியலமைப்பின் 41 (1) ஆவது பிரிவின் கீழ் முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்கள் மற்றும் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்பட்டவையாகும்.

# புதிய வானம் விருது விழா - 2025



இலங்கையில் ஆண்டுதோறும் நடை பெறும் புதிய வானம் விருது வழங்கும் விழா இந்த ஆண்டு (2025) இறுதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளுக்கான சர்வதேச ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் நிறுவுனர் திருமதி தனலட்சுமி மாதவன் இந்தியா, தமிழ் நாட்டுக்கு சிறப்பு பயணம் மேற்கொண்டிருந்தார்.

சென்னை விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்த அவரை தமிழ்நாட்டின் பிரபல தொழிலதிபரும் நெல்லை மாவட்ட ரோட்டரி சங்கத்தின் முன்னாள் ஆளுநருமான ஆறுமுகப்பாண்டியன் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

இதன்போது புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் நிகழ்ச்சித் திட்டமிடல் ஒருங்கமைப்பாளரும் ஊடக வியலாளருமான மணி ஸ்ரீகாந்தன் உடனி ருந்தார்.

புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளை பல்வேறு மக்கள் நலத்திட்டப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டுவருவதுடன், சர்வதேச நாடுகளைச் சேர்ந்த ஆளுமை யாளர்களைத் தெரிவுசெய்து அவர்களை இலங்கைக்கு வரவழைத்து விருது வழங்கிக் கௌரவித்தும் வருகின்றது.

# புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலய 150ஆவது ஆண்டு நிறைவு நடைபவனி




(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு கண்ணகி மகாவித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய நடைபவனி நேற்று(11) இடம்பெற்றது.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலை முன்றிலில் அமைக்கப்பட்டுள்ள சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவுருவச் சிலையை மட்டக்களப்பு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ஹரிகரராஜ் திறந்து வைத்தார். அத்துடன், பாடசாலையின் பெயர்ப் பலகையை அயற் பாடசாலை அதிபர்கள் ஒன்றிணைந்து திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை முன்றிலிலிருந்து ஆரம்பமான நடைபவனி பிரதான வீதியூடாக ஆரையம்பதி மகாவித்தியாலயத்தைச் சென்றடைந்து அங்கிருந்து பிரதான வீதியூடாக கிரான்குளத்தைச் சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.குகதாசன், ஆலயத் தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அம்ஷிகாவுக்கு நீதிவேண்டி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்






(கல்லடி செய்தியாளர்)

'என் மௌனம் என் குற்றமல்ல. உன் செயல் தான் குற்றம் - மௌனத்தைக் கலைப்போம்' எனும் தொனிப் பொருளில் கொழும்பில் துஷ்பிரயோகப் படுத்தப்பட்டு உயிரிழந்த அம்ஷிகாவுக்கு நீதிகோரிய ஆர்ப்பாட்டமொன்று நேற்று (11) மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டோர் கறுப்புப் பட்டியணிந்து மெழுகு வர்த்தி யேந்தி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது ''பரிதாபம் வேண்டாம். பாதுகாப்பு வேண்டும், ஒன்றாய் எழுந்தால் சீண்டல் அழியும், தண்டனை இல்லையெனில் குற்றமும் தொடரும், தண்டனை இல்லையென்பதே குற்றவாளியின் தைரியம், என் உடலை உன் உரிமையென எண்ணாதே, அரசின் மௌனம் சீண்டலுக்கான அனுமதிப் பத்திரம்'' போன்ற பதாகைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு கையளிப்பதற்கான மகஜரும் வாசிக்கப்பட்டது. இவ்வார்ப்பாட்டத்தில் சிவில் சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கையில் 2,000 பேர் தலசீமியா நோயால் பாதிப்பு: மட்டக்களப்பில் 250க்கும் மேற்பட்ட நோயாளர்கள்

## மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் முரளீஸ்வரன்




(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

''இலங்கையில் சுமார் 2,000 பேர் தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டு இரத்த மாற்று சிகிச்சை செய்து வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 250க்கும் மேற்பட்ட தலசீமியா நோயாளர்கள் காணப்படுகின்றனர். இந்நோயைத் தடுக்க சுகாதார அமைச்சு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது''- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.முரளீஸ்வரன் தெரிவித்தார்.

சர்வதேச தலசீமியா நோய் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட தலசீமியா நோய்த் தடுப்பு பணியகத்தில் இடம்பெற்ற மாவட்டத்திலுள்ள தலசீமியா நோயாளர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவு மற்றும் நிவாரணப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையில் அமைந்துள்ள மேற்படி தலசீமியா நிலையத்தில் ஆரையம்பதி பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.குணராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட தலசீமியா நோய்த்தடுப்பு பணிப்பாளர் டாக்டர் இ.உதயகுமார், எகெட் ஹரிதாஸ் நிறுவன மாவட்டப் பணிப்பாளர் அருட்தந்தை ஜெயராஜ், தலசீமியா நோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் நுஷ்ரத், தாதியர்கள், வைத்தியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட எகெட் ஹரிதாஸ் நிறுவன அனுசரணையுடன் அம்பாறை மற்றும் மாவட்டத்தின் தூர இடங்களிலிருந்து வரும் தலசீமியா நோயாளர்களுக்கு பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன், தலசீமியா நோயாளர்களுக்கு விசேட நிவாரணப் பொருட்களும் வழங்கப்பட்டன. தலசீமியா நோயிலிருந்து தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வதென்பது தொடர்பான விழிப்புணர்வு உரைகளும் வைத்தியர்களால் நிகழ்த்தப்பட்டன.



க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவிகள் ஒன்றிணைந்து கற்பித்த ஆசிரிய ஆசிரியைகளுக்கு தமது நன்றியைத் தெரிவித்தனர். அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வு அதிபர் திருமதி நஸ்மியா சனூஸ் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது பிரதி உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள், பாட இணைப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர். (நற்பிட்டிமுனை செய்தியாளர்)

# காரைதீவு இராமகிருஷ்ணனில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல்





(காரைதீவு செய்தியாளர்)

மாணவர்களிடையே ஜனநாயக மரபுகளை மதித்தல் மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை உருவாக்கும் நோக்கங்களைக் கொண்ட சமூக விஞ்ஞான பாடத்தின் இணைப்பாடவிதான செயற்பாடு கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலை மாணவர் பாராளுமன்ற பொறுப்பாசிரியரின் ஏற்பாட்டில் மாணவர் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான மாணவர் பாராளுமன்றத் தேர்தல் பாடசாலை அதிபர் சதாசிவம் ரகுநாதன் தலைமையில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலையில் அமைக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் மாணவர்கள் வாக்களிக்க வரிசையில் நிற்பதையும் அதிகாரிகள் கண்காணிப்பதையும் பிரதிஅதிபர் திருமதி தே.குலேந்திரன், உபஅதிபர் பி.சசிகரன் மற்றும் ஆசிரிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கடமையில் ஈடுபட்டதையும் காணலாம்.

# ஏறாவூர் யூ.எல்.தாவூத் பௌண்டேஷனால் மாணவர்கள் கௌரவிப்பு



(ஏறாவூர் மேலதிக செய்தியாளர்)

ஏறாவூர் யூ.எல்.தாவூத் பவுன்டேஷன் அமைப்பின் விஞ்ஞானக் கல்லூரியில் பகுதிநேர கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை(09) அமைப்பின் தலைவரும் பொறியியலாளருமான எஸ்.எல்.காலிதீன் தலைமையில் ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.ஜவாத் கலந்து சிறப்பித்ததுடன் கௌரவ அதிதியாக ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் கலந்துகொண்டார்.

மேற்படி நிகழ்வில் ஊரின் முக்கியஸ்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர், பவுண்டேஷன் நிர்வாகிகள், உலமாக்கள், கல்விமான்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். சிறந்த கல்வி அடைவுக்கு வித்திட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் ஆசிரியர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பதில் தலைவராக அட்டாளைச் சேனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எவ்.றிபாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அமைப்பின் தலைவர் என்.எம்.அமீன் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டதையடுத்து உப தலைவராகவிருந்த றிபாஸ் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

# நகர்வு மாதத்தை முன்னிட்டு கல்முனையில் விழிப்புணர்வு




(ஒலுவில் செய்தியாளர்)

உலக சுகாதார ஸ்தாபனம், ஏப்ரல் மாதத்தை (Move more Month) நகர்வு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த மாதத்தில் உடல் செயற்பாடுகளை அதிகரிக்கவும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவசியமான உடற்பயிற்சியை ஊக்குவிக்கவும் சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

அந்த வகையில், சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு சனிக்கிழமை (10) கல்முனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தினசரி உடற்பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்பாக ஆரம்பமான இவ்விழிப்புணர்வுப் பேரணி அக்கரைப்பற்று - மட்டக்களப்பு பிரதான வீதியூடாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வரை சென்று மீண்டும் அவ்வீதியூடாக கல்முனை பொதுச் சந்தையை அடைந்து அங்கிருந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை வந்தடைந்தது.

தொங்கோட்டம், நடைப்பயிற்சி, சைக்கிளோட்டம் என பல முக்கிய நிகழ்வுகள் இப்பேரணியில் உள்ளடங்கியிருந்ததுடன், பேரணியில் கலந்து கொண்டவர்கள் உடற்பயிற்சியின் அவசியம் குறித்து சுலோகங்கள் அடங்கிய பதாகைகளுடன் சென்றமை குறிப்பிடத்தக்கது.

# அல்-மினன் வித்தியாலய அதிபராக ஜுஹைறுத்தீன் கடமை பொறுப்பேற்பு



(பெரியநீலாவணை செய்தியாளர்)

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட மருதமுனை, பாண்டிருப்பு அல்-மினன் வித்தியாலயத்தின் புதிய அதிபராக எஸ்.எம் ஜுஹைறுத்தீன் வியாழக்கிழமை(08) கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய அதிபரை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை, கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தால் விண்ணப்பம் கோரப்பட்டு வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் பின்னர், மருதமுனையைச் சேர்ந்த எஸ்.எம்.ஜுஹைறுத்தீன் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர் கடமையைப் பொறுப்பேற்கும் நிகழ்வு, பதில் அதிபராகக் கடமையாற்றிய அமானுல்லா தலைமையில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் ஆகியோரின் முன்னிலையில் இடம்பெற்றது.

இதன்போது பொறியியலாளர் எம். எஸ்.பஸீல் உட்பட பாடசாலை அபிமானிகள், நலன்விரும்பிகள், பாடசாலை ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

1974ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி பிறந்த ஜுஹைறுத்தீன் தனது முதல் ஆசிரிய நியமனத்தை 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சது/விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் பெற்று ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்டார். பின்னர் 2016ஆம் ஆண்டு மே மாதம் 09ஆம் திகதி இலங்கை அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 2016 மே மாதம் 09ஆம் திகதி முதல் அதிபர் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட இவர், மருதமுனை மதீனா வித்தியாலயத்தில் அதிபர் கடமையைப் பொறுப்பேற்று அதன் பின்னர் 2017 பெப்ரவரி 01முதல் கமு/ அல்-ஹம்றா வித்தியாலயத்தில் பிரதி அதிபராகத் தனது சேவையைத் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் பாண்டிருப்பு அல்-மினன் வித்தியாலயத்துக்கு புதிய அதிபராக நியமிக்கப்பட்டு கடமையைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த ஏ.எல்.செயினுலாப்தீன், ஐ.எல்.சரிபா உம்மா ஆகியோரது இரண்டாவது புதல்வராவார் என்பதுடன் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாளிகைக்காடு முஸ்லிம் விவாக பதிவாளராக ரஹுபி நியமனம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

காரைதீவு பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள மாளிகைக்காடு ஊருக்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராக முஹம்மட் ரஹுபி பிர்தௌஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

2025.03 24ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலகத்தில் வைத்து காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் துமிந்த புஸ்பகுமாரவிடமிருந்து கிடைத்த நியமனத்தை அடுத்து (2025-05-09) அன்று முதல் செயற்படும் வண்ணம் காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து தனது நியமனத்தை அவர் உறுதிப்படுத்திக்கொண்டார்.

மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் முன்னாள் செயலாளராகவும் ஜனாஸா நலன்புரி அமைப்பின் முன்னாள் செயலாளராகவும் மற்றும் பல பொதுநிறுனங்களிலும் இணைந்து பல்வேறு சமூக சேவைகளை மேற்கொண்டுவரும் இவருக்கு இந்நியமனம் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா ஜம்மிய்யத்துல் உலமா சபையின் ஸகாத் உதவி வழங்கல்



(சீனக்குடா செய்தியாளர்)

அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா கிண்ணியா கிளையின் 2025 ஆண்டுக்கான ஸகாத் நிதியிலிருந்து பயனாளிகளுக்கு உதவி வழங்கும் நிகழ்வு நேற்று(11) இடம்பெற்றது.

கிண்ணியா உலமா சபையின் ஸகாத் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு, அதன் தலைவர் கலாநிதி அஷ்ஷேய்க் ஏ.ஆர்.நசார் தலைமையில் கிண்ணியா உலமா சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த வருடத்தில் கடந்த ஐந்து மாதங்களாக ஸகாத் பிரிவால் வசூலிக்கப்பட்ட நிதியிலிருந்து 24 பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகளும் 02 பயனாளிகளுக்கு நோய் நிவாரண உதவியும், 05 பயனாளிகளுக்கு முழுமையாகக் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளும் 04 பயனாளிகளுக்கு பகுதியளவு நிர்மாணிக்கப்பட்ட வீடுகளும் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில், ஜம்மிய்யத்துல் உலமா சபை உறுப்பினர்களோடு தனவந்தர்களும் கலந்துகொண்டனர்.

# தமிழர்களின் ஆட்சியை உறுதி செய்வதற்கு தமிழரசுக் கட்சிக்கு கிழக்கு தமிழர் கூட்டமைப்பு பகிரங்க அழைப்பு




(மட்டக்களப்பு செய்தியாளர்)

பல்வேறு விட்டுக்கொடுப்புக்கு மத்தியில் தமிழர்களின் ஆட்சியை உறுதி செய்வதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிழக்கு தமிழர் கூட்டமைப்பு பகிரங்க அழைப்பு விடுப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தன் வியாழக்கிழமை (08) மாலை மட்டக்களப்பில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ''கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் படகுச் சின்னத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வழங்கிய ஆணைக்காக அந்த மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உள்ளூராட்சி சபைகளில் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம் 37 ஆசனங்கள் கிடைத்துள்ளன. இதனை மக்கள் எமக்கு வழங்கிய பெரும் ஆணையாகவே நாம் பார்க்கின்றோம்.

அதனடிப்படையில் கிழக்கு மக்களுக்கு தனித்துவமான ஓர் அரசியல் குரல் தேவை என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். எமது கிழக்குத் தமிழர் கூட்டமைப்பானது வாகரையில் 07ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது. அதேபோன்று, மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திலும் இரண்டு வட்டாரங்களை தம்வசப்படுத்தியதுடன் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் 06 ஆசனங்களைப் பெற்று கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு முன்னிலையில் நிற்கின்றது.

அந்த அடிப்படையில் கிழக்குத் தமிழர் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் தமிழர்களின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்காக இணைந்து செயற்படுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகர சபையில் இருக்கின்ற எல்லைப்புறக் கிராமங்கள் இரண்டில் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு வெற்றிபெற்றிருக்கின்றது. அதனடிப்படையில் மக்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு தனிப்பட்ட அல்லது கட்சி விருப்பு வெறுப்புக்கப்பால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அனைவரும் ஒருமித்துப் பயணிக்க வேண்டுமென்பதை மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள்.

அதனடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு தமிழர்களின் ஆட்சியை உறுதி செய்வதற்காக அழைப்பு விடுக்கின்றோம். அவ்வாறு ஒன்றாகப் பயணிக்கின்றபோது கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று, மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனை தென் எருவில் பற்று, மண்முனை தென் மேற்கு மற்றும் போரதீவுப்பற்று ஆகிய உள்ளூராட்சி மன்றங்களிலும் நாங்கள் ஆட்சியமைக்க முடியும். அதாவது, தமிழர்களின் ஆட்சியை உறுதிப்படுத்தும் வாய்ப்பு இருக்கின்றது.

பல்வேறு விட்டுக்கொடுப்புக்கு மத்தியில் பயணிக்கின்ற கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் இந்தக் கோரிக்கையை ஏற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் ஒன்றாகப் பயணிப்பதற்கு முன் வருவார்கள் என நம்புகின்றோம். ஏனென்றால், 2015 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் எமது கட்சியின் தலைவர் சந்திரகாந்தனால் பகிரங்கமாக அழைப்பு விடுக்கப்பட்டது. மாகாண சபை ஆட்சியை நடத்துவதற்கு நாங்கள் உங்களுடன் சேர்ந்து பயணிப்பதற்கு உறுதியாக இருக்கின்றோம். ஆனால், அந்தக் கருத்தை நிராகரித்திருந்தார்கள். மீண்டும் 2018 ஆம் ஆண்டிலும் சேர்ந்து பயணிக்க அழைப்பு விடுத்திருந்தோம். அதனையும் நிராகரித்திருந்தார்கள். அதனடிப்படையில் நில, நிர்வாக, பொருளாதார இருப்புகளில் கிழக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருந்ததை அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என நாங்கள் நம்புகின்றோம்''- என்றார்.

# மண் விற்பனை செய்யும் நடவடிக்கையை தடுக்கக் கோரி கவனயீர்ப்புப் போராட்டம்

## மணல் லொறிகளை வழி மறித்தும் மக்கள் கோஷம்



(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

வாழைச்சேனை கிண்ணையடி பிரதேசத்தில் தனியார் காணியொன்றில் அகழப்பட்ட மண்ணை தென்பகுதிக்கு விற்பனை செய்யும் மண் விற்பனை நடவடிக்கையை தடுக்கக் கோரிய கவனயீர்ப்புப் போராட்டம் வியாழக்கிழமை பிரதேச மக்களால் மேற்கொள்ளப்பட்டது.

அன்றையதினம் காலை தென் பகுதியைச் சேர்ந்த கனரக வாகனங்களில் மண் ஏற்றப்படுவதைக் கண்ட பிரதேசவாசிகள் சம்பவ இடத்துக்குச் சென்று அதனைத் தடுக்க முற்பட்ட வேளை பொலிஸார் குறித்த இடத்துக்கு வருகை தந்து சம்பவத்தில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற பிரதேச மக்கள் மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியின் கும்புறுமூலை பகுதியில் மணல் லொறிகளை வெளியே செல்லவிடாமல் தடை போட்டு வழி மறித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ''அழிக்காதே அழிக்காதே மண் வளத்தை அழிக்காதே, மண்ணுக்காக உயிரையும் துறப்போம், எமது கிராமத்தின் மண் வளத்தை அழிக்காதே, நிறுத்து, நிறுத்து மண் ஏற்றுவதை நிறுத்து, மண் மாபியா கும்பலை ஒழித்து விடு, மீன் வளர்ப்பு என்ற போர்வையில் மண் மாபியாக்கள்'' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை மக்கள் கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றையதினம் காலை தொடக்கம் மாலை வரை இப்போராட்டம் இடம்பெற்றது. குறித்த மணல் அகழ்வு தொடர்பாக அரசாங்க அதிபரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அவரது தலைமையில் விசேட கலந்துரையாடலும் இடம்பெற்றது. இதில் பிரதேச செயலாளர், நில அளவை சுரங்கப் பணியகம், மாவட்ட நன்னீர் மீன்வளர்ப்பு அலுவலகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை போன்ற திணைக்களங்கள் பங்குபற்றியிருந்தன.

இக்கலந்துரையாடலின்போது எதிர்வரும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாகத் தீர்மானமெடுக்கப்படுமென்றும் அதுவரை மணல் அகழ்வு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கையை இடைநிறுத்தி வைக்கும்படியும் பணித்துள்ளார். அரசாங்க அதிபரின் பணிப்பின்பேரில் சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த கோறளைப்பற்று பிரதேச சபைச் செயலாளர், பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதன்போது இருவரை பொலிஸார் கைது செய்தமையைக் கண்டித்து பொலிஸாருடன் காரசாரமாக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் மணல் ஏற்றுவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதால் அவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தினால் அதற்கான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தனக்கு அதிகாரமுள்ளதாகவும் இது தொடர்பாக எவரும் பொலிஸ் முறைப்பாடு செய்யவில்லையெனவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெளிவுபடுத்தினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் பொலிஸாருடன் கலந்துரையாடி கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு பொலிஸாரைக் கேட்டுக்கொண்டார். இதில் ஒருவர் தற்போது நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டுத் தெரிவுசெய்யப்பட்டவராவார். அவர்கள் இருவரும் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் ஏற்றிய மணலை குறித்த அதே இடத்தில் பறிக்கும்படி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக்கொண்டனர். அதன்படி ஏற்றிய மணல் மீண்டும் பறிக்கப்பட்டது.

இதேபோன்ற சம்பவம் இனிமேலும் இவ்விடத்தில் இடம்பெறாதவாறு தாம் மேலதிக நடவடிக்கை எடுப்பதாக பிரதேச சபைச் செயலாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர். குறித்த மணல் அகழ்வு நடவடிக்கையானது நன்னீர் மீன் வளர்ப்பு என்ற போர்வையில் இடம்பெற்று வருகிறது. கடந்த 04 வருடங்களாக மணல் அகழப்பட்ட பள்ளத்தில் மீன் வளர்க்கப்படவில்லை. ஆனால், அகழப்பட்ட மணல் ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையே இடம்பெற்று வருகிறது. இதனைத் தடுக்க முயற்சிப்போருக்கெதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்து நீதிமன்ற நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

# இன அழிப்பு வாரத்தில் உயிர்நீத்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த அனைவரும் முன்வர வேண்டும்

## மட்டு.வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கோரிக்கை




(வீரமுனை செய்தியாளர்)

''வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள், தமது கைகளால் உறவுகளை வழங்கிய உறவுகளுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது மிகவும் அவசியமான விடயமாகும். 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரையில் உயிர் நீத்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசியத்துக்காகப் பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன்வர வேண்டும்'' - என மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வரலாறு தெரியாத எங்கள் இளம் சமூகத்திடம் இந்த ஜனாதிபதி தன்னை நல்லவராகக் காட்டும் செயற்பாட்டையே முன்னெடுத்து வருகின்றார். வெளித்தோற்றத்தில் தன்னை நல்லவராகக் காட்டிக்கொண்டு சிங்கள அரசியலுக்குள் முழுமையாக சிக்கியுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி திருமதி அ.அமலநாயகி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஊடக சந்திப்பு மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த அவர், ''16 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், எங்களுக்கு நடந்த இனஅழிப்புக்கான எந்த நீதியும் கிடைக்கவில்லை. இலங்கை அரசின் இன அழிப்பு நாள் மே 18. அதை எம்மால் ஒருபோதும் மறந்து விட முடியாது. அதனை முன்னிட்டு 12 ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை இன அழிப்பு வாரத்தை முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓர் இனமே அழிக்கப்பட்ட நாள் மே 18. அதனை யாராலும் மறுக்கவும் முடியாது, மன்னிக்கவும் முடியாது. இந்த இன அழிப்பானது சர்வதேசத்தின் உதவியுடன் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டது. 16 வருடங்கள் கடந்தும் சர்வதேசமும் எம்மை மறந்திருப்பதை நினைத்து நாம் வேதனையடைகின்றோம். மே 12ஆம் திகதியிலிருந்து வடகிழக்கில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் மே 18ஆம் திகதி வரையில் இந்த இனஅழிப்பு வாரத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு கோரி நிற்கின்றோம்.

இறுதி யுத்தத்தின்போது பொருளாதாரத் தடையை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தியிருந்தது. இதன்காரணமாக அப்பாவி மக்கள் சாப்பிட உணவு இல்லாமல், குடிக்க நீர் இல்லாமல் உப்பில்லா கஞ்சி அருந்தி உயிர்வாழ்ந்தவர்களும் அதுவும் கிடைக்காமல் பட்டினிச்சாவையும் இந்த மே 18பேரழிவு நாள் ஏற்படுத்தியிருந்தது. அந்தவகையில், அந்த மக்களை ஞாபகப்படுத்தும் வகையில் மே 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையில் இன அழிப்பு வாரத்தில் இளைய சந்ததிக்கு இனஅழிப்பு தொடர்பான விடயங்களைக் கொண்டுசெல்லும் வகையிலும் எமது உள்ளக் குமுறல்களை சர்வதேசம் வரையில் கொண்டுசெல்லும் வகையிலும் உப்பில்லாக் கஞ்சியை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்து வருகின்றோம்.'

இந்த இன அழிப்பு வார காலத்தில் களியாட்ட நிகழ்வுகளை நிறுத்தி பல்லாயிரம் உயிர்கள் சிதைக்கப்பட்டு விதைக்கப்பட்ட இடமே முள்ளிவாய்க்கால் மண். அந்த இடத்தில் மே 18ஆம் திகதி அனைத்து மக்களும் ஒன்றுதிரண்டு அங்கு பெரும் எழுச்சியை ஏற்படுத்தி சர்வதேசத்துக்கும் அனைவருக்கும் எடுத்துக்காட்ட அனைவரும் முன்வரவேண்டும்.

வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள், தமது கைகளால் உறவுகளை வழங்கிய உறவுகளுக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது மிகவும் அவசியமான விடயமாகும். உயிர் நீத்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்த பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசியத்துக்காகப் பயணிப்போர் உள்ளிட்ட அனைவரும் முன்வர வேண்டும். 16 வருடங்களாக இந்த நாட்டில் ஒவ்வொரு அரசு உருவாக்கம் நடைபெறுகின்றபோதிலும் ஒவ்வொரு ஜனாதிபதியும் எங்களை ஏமாற்றியே சென்றார்கள். எங்களுக்கு இலங்கைக்குள் எந்த நீதியும் கிடைக்கப்போவதில்லையென்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். எங்களுக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் கூட ஒரு கண்துடைப்பு நாடகத்தையே அரங்கேற்றியிருக்கிறது.

அநுரகுமார திசாநாயக்க தேர்தல் காலத்தில் சொல்லும்போது காணாமலானவர்களின் வலிதெரியும், தமது குடும்ப உறுப்பினர்களும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். தனது தாய் பட்ட வேதனையையும் உணர்வதாகவும் காணாமல் ஆக்கப்படுதல் என்பது மிகவும் கொடூரமானது எனவும் பிரசாரக் காலத்தில் தெரிவித்திருந்தார். இதற்குத் தீர்வுபெற்றுத்தருவோம் என்றும் கூறியிருந்தார். ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் அவரது செயற்பாடு மாறுபட்டதாகவே உள்ளது. அவரிடமிருந்து நாங்கள் எந்த மாற்றத்தையும் உணரவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினையைக் கையிலெடுப்பதற்கு அவர் தயாரில்லை.

அநுரகுமார திசாநாயக்க இங்கு ஒரு பிரசாரத்தை முன்னெடுக்கிறார், சர்வதேசத்தில் வேறொரு பிரசாரத்தை முன்னெடுக்கின்றார். 2017ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலக சட்டம் வரும்போது சர்வதேச தலையீட்டுடன் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகம் செயற்படமுடியுமென்று கூறியிருந்தார்கள். ஆனால், அதனை ஜே.வி.பி. தான் மறுத்து பிரசாரம் செய்தது. இவ்வாறான ஒருவர் ஒருபோதும் சர்வதேச விசாரணையை விரும்பமாட்டார். உள்ளக விசாரணை என்ற ஒன்றின் கீழ் முடக்குவதற்கே செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

குற்றமிழைத்தவர்களே இந்த நாட்டு அரசாங்கமாகும். குற்றமிழைத்த அரசிடம் நாங்கள் எப்படி நீதி கோருவது? சர்வதேசத்திடமே நாங்கள் நீதியைக் கேட்கலாம். இந்த அரசாங்கமும் இராணுவக் கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு எங்களைக்கூட சுதந்திரமாக நடமாட முடியாமல் பல புலனாய்வாளர்களை விட்டு எம்மைப் பின்தொடர்கின்றனர். முன்னைய ஆட்சிக்காலத்திலிருந்த அதே செயற்பாடுகள் இன்றும் இருந்துவருகின்றன. இந்த ஜனாதிபதி வரலாறு தெரியாத எங்கள் இளம் சமூகத்திடம் தன்னை நல்லவராக காட்டும் செயற்பாட்டையே முன்னெடுத்து வருகின்றார். வெளித்தோற்றத்தில் தன்னை நல்லவராகக் காட்டிக்கொண்டு சிங்கள அரசியலுக்குள் முழுமையாகச் சிக்கியுள்ளார். இந்த இன அழிப்புக்கு சர்வதேசமே தீர்வுதர வேண்டும். அதற்காகவே நாங்கள் 16 வருடங்களாகக் கண்ணீரோடு காத்திருக்கின்றோம்'' - என்றார்.

# கல்முனையில் 03 நாட்களுக்கு இறைச்சிக் கடைகளுக்கு பூட்டு

(சாய்ந்தமருது செய்தியாளர்)

தேசிய வெசாக் பண்டிகையை முன்னிட்டு பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக இன்று 12ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரையான மூன்று நாட்களும் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சிக் கடைகள் யாவும் மூடப்படுமென மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி அறிவித்துள்ளார்.

இம்மூன்று நாட்களும் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட விலங்கறுமனையும் மூடப்பட்டிருக்குமென்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிப்புரைகளை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆணையாளர் விடுத்துள்ளார். மேலும், தனிப்பட்ட இடங்களில் மாடு, ஆடு மற்றும் கோழி உள்ளிட்ட விலங்குகளை அறுக்க வேண்டாமெனவும் அனைத்து இறைச்சிக் கடைகளின் உரிமையாளர்களும் பொது மக்களும் இவ்வறிவுறுத்தலுக்கமைவாக செயற்படுமாறும் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# போதைப்பொருள் பாவனையற்ற மாதிரி கிராமத்தை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்

(மட்டக்களப்பு)

போதைப்பொருள் பாவனையற்ற மாதிரிக் கிராமத்தை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டமானது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட போதைப் பொருள் முற்தடுப்பு உத்தியோகத்தர் ப.தினேஸின் ஏற்பாட்டில் புதிய மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் போதைப்பொருள் பாவனையற்ற மாதிரிக் கிராமத்தை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் ஆரம்பகட்டமாக மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் ஈச்சந்தீவு, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் நொச்சிமுனை, மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் மகிழடித்தீவு தெற்கு, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் பிறைந்துறைச்சேனையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன

மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை தொடர்பான முற்தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்போது அதிகாரிகளுக்கு போதைப்பொருள் பாவனையாளர்களிடையே மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார மருத்துவமாது, போதைப்பொருள் முற்தடுப்பு உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# மீன் திருட்டை இல்லாதொழிக்கக்கோரி மருதூர் சதுக்கத்தில் திரண்ட மீனவர்கள்

## பாதுகாப்புப் படையினரும் உடந்தையென மக்கள் குற்றச்சாட்டு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மீன்களை கடலில் வைத்தே திருடும் கும்பலுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும் பணி மந்தகதியில் நடப்பதாகவும் பாதுகாப்புப் படையினரும் இந்த ஈனச்செயலுக்கு உடந்தையாக இருப்பதும் ஆழ்கடலில் இயற்கையுடன் போராடி அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டுசெல்ல மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாட்டை இனியும் அனுமதிக்க முடியாதெனவும் தெரிவித்து அம்பாறை மாவட்ட பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த மீனவர்கள் சாய்ந்தமருது மருதூர் சதுக்கத்தில் சனிக்கிழமை (10) கூடினர்.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் ஆழ்கடல் மீனவர் சங்கங்கள், மீனவர் சமாசங்கள், மீனவர் சம்மேளனங்கள், மீனவர்கள் ஆகியன இணைந்து சாய்ந்தமருதில் நடத்திய மீன் திருட்டை ஒழிப்பது தொடர்பிலான ஒன் கூடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த மீனவர்கள், சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் இலகுவாகத் தப்பிவிட முடியாது. இலங்கை கடற்படை, விசேட அதிரடிப் படை, பொலிஸாரின் கூட்டு முயற்சியில் இந்தத் திருட்டு நடவடிக்கைகளை ஒழிக்க விசேட திட்டத்தைச் செயற்படுத்தி மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தர உறுதியளிப்பதாகப் பலரும் தெரிவிக்கிறார்கள்.

ஆனால், அவை நடந்த பாடில்லை. பாராளுமன்றத்திலும் கடந்த காலங்களில் எங்களின் பிரச்சினைகள் குறித்து பேசப்பட்டுள்ளன. நாங்களும் கடந்த காலங்களில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரிடமும் பேசியும் கலந்துரையாடியும் எவ்வித ஆக்கபூர்வமான தீர்வும் கிட்டவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிக்குடி, செட்டிபாளையம், தேத்தாத்தீவு உட்பட அதை அண்டிய பிரதேசங்களிலேயே ஆழ்கடல் மீனவர்களின் மீன்கள் திருட்டுப்போகின்றன. 40 (மணிக்கு 40 கிலோமீற்றர்) குதிரை வேகம் கொண்ட சிறியரக மீன்பிடிப் படகுகளைக்கொண்டே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மீன்களுடன் சேர்த்து மீன்பிடி வலைகளையும் வெட்டியெடுத்துச் செல்வதால் எங்களுக்கு பலத்த நஷ்டங்களும் கஷ்டங்களும் ஏற்படுகின்றன. எங்களின் உயிருக்கும் உத்தரவாதமில்லை. பலத்த அச்சுறுத்தலை நாங்கள் தினமும் எதிர்கொள்கிறோம்''- என்றனர்.

எங்களின் குரல் உரியவர்களின் காதுகளுக்குச் சென்று எங்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காது போனால் அடுத்த கட்ட நடவடிக்கையாக பாரிய ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்வதுடன் மிகப்பெரிய எதிர்ப்பு நடவடிக்கையையும் தொழிற்சங்கப் போராட்டத்தையும் முன்னெடுப்போம் என்றனர். இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாபா, காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.பர்ஹான், சாய்ந்தமருது வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ்.எம். முபாரக் உட்பட மீனவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## NDB Pixel தொடர்பான விழிப்புணர்வை வழங்க பிஷப் கல்லூரியுடன் இணைவு



NDB வங்கியானது அண்மையில் கொழும்பு பிஷப் கல்லூரியுடன் இணைந்து அதன் முன்னோடி இளைஞர் வங்கித் தயாரிப்பான NDB Pixel மூலம் 13 முதல் 17 வயது வரையிலான மாணவர்களிடையே நிதியியல் கல்வியறிவை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்தும் ஒரு பிரத்தியேக விழிப்புணர்வு முயற்சியை ஆரம்பித்தது. NDB வங்கியின் ஈடுபாட்டுடன் கூடிய இந்த முயற்சியானது அதிகரித்து வரும் டிஜிட்டல் நிதியியல் சூழலில் அடுத்த தலைமுறையினருக்குத் தேவையான கருவிகள் மற்றும் அறிவைக் கொண்டு தம்மை விருத்தி செய்து கொள்வதில் NDB இன் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது.

NDB வங்கியானது இந்த ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் வகையில் பிஷப் கல்லூரி மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்காக சிறப்பாக வடிவமைத்து நடத்திய விழிப்புணர்வு அமர்வு இருந்தது. இந்த விழிப்புணர்வு அமர்வில் பதின்ம வயது மாணவர்களுக்கான NDB Pixel டன் கணக்கின் நன்மைகள் தொடர்பாக வங்கியால் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் இந்தக் கணக்கானது பதின்ம வயது பருவத்தினர் நிதிப் பொறுப்பை நோக்கி முதலாவது அடியை எடுத்து வைக்க எவ்வாறு உதவுகிறது என்பதையும் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இந்தக் கணக்கு தொடர்பான SMS அறிவுறுத்தல்கள் மற்றும் இலத்திரனியல் -அறிக்கைகள் மூலம் விவேகமான மேற்பார்வையை மேற்கொள்ள வழங்கப்படும் அனுமதி பற்றியும் சிறப்பாக எடுத்தியம்பியது.



மக்கள் வங்கித் தலைவர் பேராசிரியர் நாரத பெர்னாண்டோ 2024 ஆம் ஆண்டுக்கான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கையை நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவிடம் சமீபத்தில் கொழும்பு 01 இல் உள்ள நிதியமைச்சில் கையளித்து வைத்துள்ளது. மக்கள் வங்கியின் பிரதம நிர்வாக அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா மற்றும் நிதித் துறை தலைமை அதிகாரி அஸ்ஸாம் ஏ. அஹமட் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



இலங்கையின் முன்னணி அலுமினிய உற்பத்தியாளரான Alumex PLC, வாடிக்கையாளர் விநியோகச் சங்கிலி முகாமைத்துவத்தில் (Supply Chain Management) விசேடத்துவத்துடனும் நிலைபேறான தன்மையுடனும் முன்னேறுவது தொடர்பான அதன் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. அண்மையில் Alumex நிறுவனம், Institute of Supply and Materials Management (ISMM) நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளதன் மூலம் இது வெளிப்படுகின்றது. இந்த மூலோபாய கூட்டாண்மையின் உத்தியோகபூர்வ ஆரம்பம் சமீபத்தில் இடம்பெற்ற ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் (MoU) மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. Alumex PLC நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரமுக் தெடிவாலா, ISMM தலைவர் ஜயந்த கல்லேஹேவா மற்றும் இந்த நிகழ்வில் ISMM நிறுவனத்தின் தலைமைத்துவ குழுவினர் மற்றும் கூட்டாளர் நிறுவனங்களின் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## தங்கத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை வழங்க முன்வந்துள்ள அமானா லைவ் இன்சூரன்ஸ்



உலகளாவிய ரீதியில் தங்கத்தின் விலை வரலாறு காணாத உயர்வைப் பதிவு செய்துள்ள நிலையில், பல முதலீட்டாளர்கள் தங்கத்தின் மீது முதலீடு செய்வதில் நாட்டம் காண்பித்து வரும் நிலையில், இலங்கையர்களுக்கும் காப்புறுதி யினூடாக தங்கத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை அமானா லைவ் இன்சூரன்ஸ் வழங்க முன்வந்துள்ளது.

வாடிக்கையாளர்களுக்கு சகல ஆயுள் காப்புறுதி தீர்வுகளிலும் பிரத்தியேகமான தங்க முதலீட்டு நிதியத்தை அணுகும் வாய்ப்பை வழங்கும் இலங்கையின் ஒரே ஆயுள் காப்புறுதி வழங்குனராக அமானா லைவ் இன்சூரன்ஸ் திகழ்கிறது. அதில் ஓய்வூதியம், கல்வி மற்றும் சுகாதாரத் திட்டங்கள் போன்றன அடங்கியுள்ளன. நிதிசார் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய ரீதியில் அதிகளவு பெறுமதி வாய்ந்த சொத்தின் நீண்டகால உறுதித் தன்மை ஆகியவற்றுடன் இலங்கை யர்களுக்கு தங்கத்தில் முதலீடு செய்து முதிர்வின்போது தங்கத் தைப் பெற்றுக்கொள்ளும் பிரத்தி யேகமான வாய்ப்பை இது வழங்கியுள்ளது.

2025 மார்ச் 31 ஆம் திகதியன்று தங்க முதலீட்டு நிதியம் 12 மாத வருமதியாக 19% எனும் உயர் தொகையை வழங்கியிருந்தது. தங்க நிதிய முதலீட்டுத் தெரிவை தமது செல்வ திரட்டு திட்டமிடல் மூலோ பாயத்தில் தெரிவுசெய்தி ருந்த காப்புறுதிதாரர்களுக்கு உறுதியான வருமதிகளை வழங் கியிருந்தது.

உங்கள் பிள்ளையின் கல்வி, உங்களின் ஓய்வூதியம் அல்லது நீண்டகால செல்வத் திரட்டு என நீங்கள் ஏதேனும் விடயத்தைத் திட்டமிடுகின்றீர்களாயின் அமானா லைவ் இன்சூரன்ஸ் உங்களுக்கு இலங்கையின் மிகவும் பரந்த மற்றும் உயர் வினைத்திறன் வாய்ந்த முதலீட்டுப் பிரிவுகளை வழங்குகிறது. அதில் Protected Multiple Fund, Stable Multiple Fund, Growth Multiple Fund, Volatile Multiple Fund, Bullion Multiple Fund மற்றும் பெருமளவு வரவேற் பைப் பெற்ற தங்க முதலீட்டு நிதியம் (Gold Investment Fund) ஆகியன அடங்கியுள்ளன. இவை ஒவ்வொன்றும், வெவ்வேறு நிதிசார் இலக்குகளுக்கும் இடர் கோவைகளுக்கும் பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள் ளன.

## Beautyworld Saudi Arabia இல் பிரகாசித்த உள்நாட்டின் Hemas வர்த்தகநாமங்கள்





Hemas International Business நிறுவனமானது தங்களது பிரபல மூலிகை மற்றும் ஆயுர்வேத தயாரிப்புகளை அண்மையில் சவூதி அரேபியாவின் முன்னணி கண்காட்சியில் சர்வதேச பார்வையாளர்களுக்கு காட்சிப்படுத்தியது. இது ரியாத் சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சி மையத்தில் இடம்பெற்றதுடன், அங்கு Beautyworld கண்காட்சியில் உள்நாட்டு வர்த்தகநாமங்களை காட்சிப்படுத்திய ஒரேயொரு இலங்கை தனிநபர் பராமரிப்பு நிறுவனமாக ஹேமாஸ் திகழ்ந்தது. உலகப் புகழ்பெற்ற கண்காட்சி, தொழில்துறை நிபுணர்கள், உலகளாவிய வர்த்தகநாமங்கள் மற்றும் அழகு புத்தாக்குனர்களை ஒன்றிணைத்து தயாரிப்புகள், போக்குகள் மற்றும் வணிக வாய்ப்புகளின் துடிப்பான காட்சிப்படுத்தலை வழங்குகிறது. மூன்று நாள் கண்காட்சியில் Kumarika, Vivya, Swa மற்றும் Prasara போன்ற உள்நாட்டு வர்த்தகநாமங்களுடன் தனது Ceylon Soul Cinnamon வரிசையை முழு அழகு விநியோகச் சங்கிலியையும் உள்ளடக்கிய 400க்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்களுக்கு நிறுவனம் காட்சிப்படுத்தியது. முன்னணி முதலீட்டாளர்கள் மற்றும் பிரமுகர்கள் Hemas இன் கவர்ச்சிகரமான இயற்கை எண்ணக்கருக்கள், விரிவான அழகு சாதனப் பொருட்கள் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு வர்த்தகநாமங்களைப் பற்றி அறிந்துகொள்ள Hemas காட்சிக்கூடத்தில் கூடினர்.

## எதிர்கால விமானக் குழுவுக்கு எமிரேட்ஸ் A350 ஒரு புதிய சகாப்தம்







எமிரேட்ஸ் A350 விமானமானது விமான நிறுவனத்தின் எதிர்கால விமானக் குழுவுக்கு ஒரு புதிய சகாப்தத்தைக் குறிப்பதாக அமைகிறது. இது எமிரேட்ஸின் அனைத்து அகலமான, திறமையான மற்றும் நவீன விமானங்களின் குழுவில் இணையும் மூன்றாவது விமான வகையாகும். இதில் ஏயார்பஸ் யு380 மற்றும் பிரபலமான போயிங் 777 ஆகியவை அடங்குகின்றன.

எமிரேட்ஸ் A350 விமானமானது வர்த்தகம், பிரீமிய பொருளாதாரம் மற்றும் பொருளாதார வகுப்பு என 3 பயண வகுப்புகளைக் கொண்டிருக்கும். விமானத்தின் இருக்கைக் கட்டமைப்பில் 32 அடுத்த தலைமுறை வர்த்தக வகுப்பு இருக்கைகள், பிரீமியம் பொருளாதாரத்தில் 21 இருக்கைகள் மற்றும் ஆரம்ப குறுகிய மற்றும் நடுத்தர தூர விமானங்களுக்கு 259 தாராளமாக அமைக்கப்பட்ட பொருளாதார வகுப்பு இருக்கைகள் உள்ளன. முதலாவது எமிரேட்ஸ் A350 விமானங்கள் விமானக் குழுவில் இணையத் தொடங்கியுள்ளதால் விமான நிறுவனமானது வாடிக்கையாளர்களுக்கு அதன் மிகவும் பாராட்டப்பட்ட முதற்தர வர்த்தக தயாரிப்பை அனுபவிக்கவும் அதன் அடுத்த தலைமுறை வர்த்தக வகுப்பு பிரிவுகளை மாதிரியாகக் காண்பிக்கவும் அதிக வாய்ப்புகளை வழங்குகிறது. குறிப்பாக, குறுகிய மற்றும் நடுத்தர தூர வழித்தடங்கலிலும் எதிர்காலத்தில் டுபாயிலிருந்து 15 மணிநேரம் வரை பறக்கும் நீண்ட தூர பயணங்களுக்கும் இந்த நலன் பயக்கும் வாய்ப்புகளை வழங்கவுள்ளது.

## உலகின் மிக இலகுவான Copilot + PC ஐ ASUS அறிமுகம்



ASUS மற்றும் Republic of Gamers (ROG) இலங்கையில் அல்ட்ரா-போர்ட்டபிலிட்டி, AI மற்றும் அடுத்த தலைமுறை கேமிங் அனுபவங்க ளுக்கு ஒரு புதிய அளவுகோலை அமைத்து இலங்கையில் தங்கள் சமீபத்திய கணினி கண்டு பிடிப்புகளின் வரிசையை அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வரிசையில் முன்னணியில் இருப்பது ASUS Zenbook A14 மற்றும் ROG Strix SCAR 16/18 மாதிரிகள் ஆகும், இவை இரண்டும் தொழில்முறை உற்பத்தித்திறன் முதல் உயர் செயல்திறன் கொண்ட கேமிங் வரை இலங்கையர்கள் தனிப்பட்ட கணினியில் ஈடுபடும் விதத்தில் புரட்சியை ஏற்படுத்துமென்று உறுதியளிக்கின்றன.

கொழும்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மொத்தம் ஐந்து புதிய மடிக்கணினிகள் அறிமுகப்படுத்தப்பட்டன: ASUS Zenbook A14 (UX3407), Vivobook S14 (S3407), Vivobook 16 (X1607) மற்றும் கேமிங்கை மையமாகக் கொண்ட ROG Strix SCAR 16/18 (G635/G835), மற்றும் ROG Zephyrus G16 (GU605). இந்த மாதிரிகள், பெயர்வுத்திறன், சக்தி மற்றும் ஒப்பற்ற வடிவமைப்பு ஆகியவற்றை இணைத்து மாணவர்கள், தொழில் வல்லுநர்கள், தொழில்முனைவோர், விளையாட்டாளர்கள் மற்றும் டிஜிட்டல் படைப்பாளர்கள் உள்ளிட்ட பரந்த பயனர் தளத்தைப் பூர்த்தி செய்கின்றன.இந்தப் புதுமை அலையின் முன்னணியில் இருப்பது ASUS Zenbook A14 ஆகும், இது வெறும் 980 கிராம் எடையுள்ள எங்கள் இலகுவான Copilot+ PC ஆகும். அலுமினியத்தின் லேசான தன்மை மற்றும் நீடித்துழைப்பு மற்றும் செரமிக் கீறல் எதிர்ப்பு பண்புகளை இணைத்து, எதிர்கால செரலுமினிய சேஸுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது - இது சமரசம் இல்லாமல் அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சமீபத்திய Snapdragon X செயலியால் இயக்கப்படும் Zenbook A14, தொழில்துறையில் முன்னணியில் உள்ள 45 TOPS நியூரல் ப்ராசசிங் யூனிட் (NPU) செயல்திறன், ஒரு ASUS Lumina OLED டிஸ்ப்ளே, 32 மணிநேர பேட்டரி ஆயுள் (பயன்பாட்டைப் பொறுத்து பேட்டரி ஆயுள் மாறுபடலாம்), Wi-Fi 7, USB4 இணைப்பு மற்றும் 1 TB மின்னல் வேக SSD சேமிப்பிடம் ஆகியவற்றை வழங்குகிறது. இது ஒரு மொபைல் பவர்ஹவுஸ் என்பதை மறுவரையறை செய்கிறது.

## (DIFC) பிரதிநிதி அலுவலகத்தை திறக்கவுள்ள கொமர்ஷல் வங்கி





கொமர்ஷல் வங்கியானது மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் தெற்காசியா (MEASA) பிராந்தியங்களில் முன்னணி உலகளாவிய நிதியியல் மையமாகத் திகழும் டுபாய் சர்வதேச நிதியியல் நிலையத்தில் (DIFC) ஒரு பிரதிநிதி அலுவலகத்தைத் திறப்பதன் மூலம் தனது சர்வதேச தடத்தை கணிசமாக விரிவுபடுத்தவுள்ளது.

இந்த சமீபத்திய முன்னேற்ற நடவடிக்கையை அறிவித்துள்ள இலங்கையின் மிகப் பாரிய தனியார் துறை வங்கியான கொமர்ஷல் வங்கி DIFC இல் பிரதிநிதி அலுவலகத்தை இயக்குவதற்கான டுபாய் நிதியியல் சேவைகள் ஆணைக்குழுவின் (DFSA) உரிமத்தை ஏற்கனவே பெற்றுள்ளதாகவும் விரைவில் செயற்பாடுகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரதிநிதி அலுவலகமானது இலங்கையின் பிரதம பங்குதாரர்களை உள்ளடக்கிய நிலையிலும் அதேவேளை, ஐக்கிய அரபு எமிரேட்ஸில் (UAE) செயற்பாடுகளைக் கொண்ட பங்களாதேஷ் மற்றும் மாலைதீவிலும் பிராந்தியத்தில் வங்கியின் வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தளத்துக்கான தொடர்பு புள்ளியாக செயற்படவுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது. கொமர்ஷல் வங்கியானது பங்களாதேஷில் 20 கிளைகள், மியன்மாரில் ஒரு நுண் நிதி நிறுவனம் மற்றும் மாலைதீவில் ஒரு முழுமையான Tier I வங்கி ஆகியவற்றைக் கொண்டுள்ள நிலையில், ஏற்கனவே இலங்கை வங்கிகளின் மத்தியில் பரந்த சர்வதேச தடத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## Mastercard - LankaPay ஆகியன இணைந்து அறிமுகப்படுத்தும் மும்முனைத் திட்டம்



இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்துவதில் தாம் கொண் டிருக்கும் உறுதிப்பாட்டை மீளவும் வலியுறுத்தும் வகையில் கொடுப்பனவு அட்டைகள் வழங்கல்கள், டிஜிட்டல் கட்ட ணங்களை ஏற்றுக்கொள்வது மற்றும் டிஜிட்டல் பாதுகாப்பு என்பவற்றை மேம்படுத்த மூலோபாயக் கூட்டமைப்பை ஏற்படுத்தியிருப்பதாக Mastercard மற்றும் இலங்கையின் தேசிய கொடுப்பனவு வலைய மைப்பான LankaPay ஆகியன இன்று அறிவித்தன.

இரு நிறுவனங்களின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகள், நாட்டி லுள்ள முன்னணி வங்கிகள் மற்றும் நிதித்தொழில்நுட்ப நிறுவனங்களின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் இந்த அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கூட்டாண்மையின் மூலம் மூன்று பிரதான தீர்வுகள் முன்வைக்கப்படவுள்ளன. டிஜிட்டல் முறையை ஏற்றுக் கொள்வது மற்றும் நிதி உள்ளடக் கத்தைத் துரிதப்படுத்தும் வகை யில் இணை வர்த்தக நாமம் கொண்ட டெபிட் அட்டைகளை வழங்குதல், நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டு வணிகங்களுக்கு குறைந்த செலவிலான QR கொடுப்பனவை செயற்படுத்தும் Mastercard Pay Local தீர்வு மற்றும் மேம்பட்ட பரிவர்த்தனையை உறுதி செய்யும் வகையில் Mastercards Brighterion AI தீர்வுகள் என்ப னவே அவையாகும்.

## கிளிநொச்சி - புதுக்குடியிருப்பில் மோர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸின் புதிய கிளைகள்





இலங்கை முழுவதும் அனைவருக்கும் நிதி வசதிகள் கிடைக்கப்பெறுவதை விரிவுபடுத்தும் முகமாக மோர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளின் கீழ், வடமாகாணத்தில் இரண்டு புதிய கிளைகளை அது சமீபத்தில் திறந்து வைத்துள்ளது. இது நிறுவனத்தால் திறந்து வைக்கப்பட்டுள்ள 74ஆவது மற்றும் 75ஆவது கிளைகளாக அமைந்துள்ளதுடன், சமூக அடிப்படையிலான நிதிச் சேவைகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதில் அதன் அர்ப்பணிப்பை இது மேலும் உறுதிப்படுத்துகிறது.

அதன் 74ஆவது கிளை 2025 ஏப்ரல் 4ஆம் திகதியன்று இல 151, ஏ9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரியிலும் 75 ஆவது கிளையானது முதலாம் வட்டாரம், பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு என்ற முகவரியிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இரு நிகழ்வுகளிலும் மோர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜெரார்ட் ஒன்டாட்ஜி, மோர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்தின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி லக்சந்த குணவர்தன, ஏனைய சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் உள்ளிட்ட மதிப்புக்குரிய விருந்தினர்கள் பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.


நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தனது கிளை விரிவாக்கத்தை விரைவுபடுத்துவதற்கான மோர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனத்தின் தூரநோக்கு இலக்கின் ஒரு பகுதியாக இந்த விஸ்தரிப்பு முயற்சிகள் அமைந்துள்ளன. அனைத்து கலாசார, மத மற்றும் சமூகப் பின்னணிகளையும் சார்ந்த சமூகங்களுக்கு தனது நிதிச் சேவைகள் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்வதில் நிறுவனத்தின் அணுகுமுறையானது ஆழமாக வேரூன்றியுள்ளது. தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை வழங்குவதன் மூலம் நிதியியல் வலுவூட்டலை வழங்குவதே அதன் இறுதி இலக்காகும்.

## மீண்டும் பாக். தாக்குதல் நடத்தினால்

# பின்விளைவுகள் பயங்கரமாக இருக்கும்!!

## பாரதப் பிரதமர் மோடி சூளுரை

## ‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்கிறது; இந்திய விமானப்படை திட்டவட்டம்





‘‘பாகிஸ்தான் மீண்டும் அத்துமீறி தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் பின்விளைவுகள் பயங்கரமாக இருக்கும்’’ என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தான் உடனான தாக்குதல் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ள நிலையில் முப்படைத் தளபதிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தியுள்ளார். அப்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

கடந்த நான்கு நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் மோதல் உச்சத்தில் இருந்தது. போர் மேலும் தீவிரமடைய இருந்த நிலையில், நேற்றுமுன்தினம் (10) மாலை 05 மணிமுதல் போர் நிறுத்தத்தை அமுல்படுத்த இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்புக் கொண்டன. இதனையடுத்து போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

**முப்படைத் தளபதிகளுடன் மோடி ஆலோசனை**

இந்நிலையில், டில்லியில் நேற்று (11) பிரதமர் மோடி அவரது இல்லத்தில் முப்படை தளபதிகளுடன் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் முப்படைத் தலைமை தளபதி அனில் சௌகான், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரும் பங்கேற்றனர்.

எல்லைப் பகுதியில் தற்போது நிலவும் சூழல் குறித்து முப்படை தளபதிகளிடம் பிரதமர் மோடி கேட்டறிந்தார். எல்லையில் தாக்குதல் நிறுத்தப்பட்ட நிலையில் அடுத்தக் கட்ட நடவடிக்கை குறித்து பிரதமர் ஆலோசனை நடத்தினார். முப்படை தளபதிகளுக்கு பிரதமர் மோடி முக்கிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் என டில்லி வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

**பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் - பிரதமர் மோடி**

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (10) இந்திய - பாகிஸ்தான் மோதல் நிறுத்தப்பட்ட நிலையில் அன்று இரவு போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி ட்ரோன் தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலை இந்தியாவின் வான் பாதுகாப்பு அமைப்பு வெற்றிகரமாக முறியடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், எல்லை பகுதிகளில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வோன்ஸுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது ‘‘பாகிஸ்தான் மீண்டும் அத்துமீறி தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி கொடுக்கப்படும்’’ என்றும், ‘‘பின்விளைவுகள் பயங்கரமாக இருக்கும்’’ என்றும் பிரதமர் மோடி தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் மேற்கு எல்லையில் பாதுகாப்பு நிலையை இராணுவ தலைமை தளபதி உபேந்திர திவேதி மதிப்பாய்வு செய்தார். இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்கினால் அதற்கு தகுந்த பதிலடி கொடுக்க இராணுவ படைகளுக்கு முழு அதிகாரத்தை அவர் வழங்கியுள்ளார் என இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

**‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்கிறது**

‘‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்பான செயற்பாடுகள் இன்னும் முடியவில்லை’’ என இந்திய விமானப் படை அறிவித்துள்ளது.

இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த 04 நாட்களாக போர் பதற்றம் உச்சத்தில் இருந்தது. மோதல், மேலும் தீவிரமாகும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்ட நிலையில், திடீரென இரு தரப்பும் மோதலை நிறுத்திக்கொள்ள சம்மதித்தன. இந்நிலையில், ‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்கிறது என இந்திய விமானப்படை அறிவித்துள்ளது.

இது குறித்து இந்திய விமானப் படை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ‘‘ஒபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கையில் விமானப் படைக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை துல்லியமாக வெற்றிகரமாக செய்துள்ளோம். விவேகமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

‘ஒபரேஷன் சிந்தூர்’ தொடர்பான செயற்பாடுகள் இன்னும் முடியவில்லை. சரியான நேரத்தில் விரிவான விளக்கமளிக்கப்படும். சரிபார்க்கப்படாத தகவல்களை ஊகிப்பதையும் பரப்புவதையும் தவிர்க்க வேண்டும்’’ - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் 32 விமான நிலையங்களுக்கு பூட்டு**

இதனிடையே இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் நிறுத்தப்பட்ட நிலையில் விமான சேவை இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. விமான நிலையங்களின் சேவை எப்போது தொடங்கும் என்ற அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை. 32 விமான நிலையங்கள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் மக்கள் வீதி, ரயில் போக்குவரத்தை மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

**பாகிஸ்தானில் 150 விமான சேவைகள் இரத்து**

அதேசமயம் பாகிஸ்தானில் இன்று 150 விமானங்களின் சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல் தெரிய வந்துள்ளது.

பஹல்காம் பள்ளத்தாக்கில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி நடத்திய தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் பலியாகினர்.

இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தானில் பயங்கரவாத முகாம்களைக் குறிவைத்து இந்தியா கடந்த 07ஆம் திகதி ‘ஒபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரின் தாக்குதல் மேற்கொண்டது. இத்தாக்குதலில், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலுள்ள ஒன்பது பயங்கரவாத தளங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து, இந்தியாவும் பாகிஸ்தானும் எல்லையில் வான்வழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. இப் பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியாக அமெரிக்கா நடத்திய பேச்சுவார்த்தையில், இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் நிறுத்தம் சனிக்கிழமை மாலை 05 மணிமுதல் அமுலுக்கு வந்தது.

**26 இடங்களில் பாகிஸ்தான் ட்ரோன்கள்**

வடக்கு காஷ்மீரின் பாரமுல்லா முதல் குஜராத் மாநிலம் பூஞ்ச் வரையிலும் 26 இடங்களில் பாகிஸ்தானின் ட்ரோன்கள் தென்பட்டதாக இந்திய மத்திய பாதுகாப்புத் துறை அறிவித்துள்ளது.

பாரமுல்லா, ஸ்ரீநகர், அவந்திபோரா, நாக்ரோட்டா, ஜம்மு, ஃபெரோஸ்பூர், பதான்கோட், ஃபஸில்கா, லால்கர் ஜட்டா, ஜெய்சால்மர், பார்மெர், பூஜ், குவார்பெட், லாக்கி நாலா உள்ளிட்ட பகுதிகளில் பாகிஸ்தானின் ட்ரோன்கள் கண்டறியப்பட்டன.

## 1000 ஆண்டுகால

# காஷ்மீர் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்யத் தயார்

## ட்ரம்ப் அறிவிப்பு



**1000** ஆண்டுகால காஷ்மீர் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்ததாவது:

‘‘இந்தியா மற்றும் பாகிஸ்தானின் வலுவான மற்றும் அசைக்க முடியாத சக்திவாய்ந்த தலைமையைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இரு நாட்டுத் தலைவர்களும் எடுத்த உறுதியான முடிவால் பல உயிர்கள் காப்பற்றப்பட்டுள்ளன. இந்த வரலாற்று மிக்க, துணிவான முடிவை எடுப்பதற்கு அமெரிக்கா உங்களுக்கு உதவ முடிந்தது என்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். அதேநேரம், இந்த இரண்டு பெரிய நாடுகளுடனும் வர்த்தகத்தை கணிசமாக அதிகரிக்கப் போகிறேன்.

மேலும், ‘‘ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர்’’ காஷ்மீர் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வைகாண உங்கள் இருவருடனும் இணைந்து மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருக்கிறேன். இந்தியா மற்றும் பாகிஸ்தானின் தலைவர்களை கடவுள் ஆசிர்வதிப்பார்” என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சமரசத்தின்பேரில் இந்தியாவும் பாகிஸ்தானும் மோதல் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டதாக ட்ரம்ப் முதலில் தெரிவித்தார். அவரது அறிவிப்பு வெளியான சிறிது நேரத்தில் இந்திய மத்திய அரசும் மோதல் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டது.

# ‘‘உலகில் அமைதிக்கான அற்புதம் ஏற்படுவதற்கு கடவுள் ஆசி வழங்கும்படி வேண்டிக்கொள்கிறேன்’’

## பாப்பரசர் 14ஆம் லியோ தெரிவிப்பு



‘‘உலகில், அமைதிக்கான அற்புதம் ஏற்படுவதற்கு கடவுள் ஆசி வழங்கும்படி வேண்டிக்கொள்கிறேன்’’ இவ்வாறு புதிய பாப்பரசர் 14ஆம் லியோ தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக வட அமெரிக்காவை சேர்ந்த கார்டினல் ரொபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் கடந்த 08ஆம் திகதி தெரிவுசெய்யப்பட்டார். அவர் ‘பாப்பரசர் 14ஆம் லியோ’ என அழைக்கப்படுவார் என்று கார்டினல்கள் அறிவித்தனர்.

இந்நிலையில், பாப்பரசர் லியோ, புதிய பாப்பரசராக பொறுப்பேற்று கொண்ட பின்னர் முதல் ஞாயிற்று கிழமையான நேற்று (11) பொதுமக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இதில், உலகம் முழுவதுமுள்ள அன்னையருக்கு அன்னையர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

உக்ரைன் மற்றும் காஸாவில் அமைதி ஏற்பட வேண்டும் என வேண்டுகோளாக கேட்டுக் கொண்டார். உடனடி போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும், பணயக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் மற்றும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அப்போது அவர் வலியுறுத்தினார்.

மறைந்த பாப்பரசர் பிரான்சிஸ் கூறிய விடயங்களை எதிரொலிக்கும் வகையில் அவர் பேசும்போது, உலக நாடுகளின் மோதல்களை கடுமையாக சாடினார். 3ஆம் உலக போருக்கு ஈடாக நாடுகள் மோதிக் கொள்ளும் சம்பவங்களை கடிந்து கொண்டார்.

இதேபோன்று, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கு பாப்பரசர் லியோ வரவேற்பு தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தைகள் நீடித்த அமைதிக்கு வழிவகுக்கும் என அவர் நம்பிக்கையையும் வெளியிட்டார். உலகில், அமைதிக்கான அற்புதம் ஏற்படுவதற்கு கடவுள் ஆசி வழங்கும்படி வேண்டிக் கொள்கிறேன் - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் கல்லறையில் மரியாதை**




முன்னதாக மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் கல்லறையில் மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தினார். பாப்பரசர் பதவியில் தன்னை வழிநடத்துமாறு பிரார்த்தனை செய்ததாக 14ஆம் லியோ தெரிவித்தார். தன்னை காண திரண்டிருந்தவர்களுக்கு போப் ஆசிர்வாதம் வழங்கினார்.

# 15இல் ரஷ்ய - உக்ரைன் போர்நிறுத்த பேச்சுவார்த்தை

## நேரடி பேச்சுக்கு புட்டின் அழைப்பு!





**உக்ரைன் வந்திருந்த ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் தொலைபேசியூடாக உரையாடியபோது...**

போர் நிறுத்தம் தொடர்பாக நேரடி பேச்சுவார்த்தைக்கு வரும்படி உக்ரைனுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அழைப்பு விடுத்துள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் இடம்பெற்றுவரும் நிலையில், அதை நிறுத்த உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், போர் நிறுத்தம் தொடர்பாக இரு தரப்பிலும் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

இந்நிலையில், போர் நிறுத்தத்தை 30 நாட்களுக்கு நீடிக்க வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளன. அமைதியை நோக்கி செல்வதற்கான தீவிர பேச்சுவார்த்தை நடத்தத் தயார். எதிர்வரும் 15ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தலாம் என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவித்துள்ளார்.

இது குறித்து புட்டின் தெரிவிக்கையில்,

உக்ரைனுடன் போரை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்போது முடிவு உக்ரைன் அதிகாரிகள் கையில் இருக்கிறது. அவர்கள் தங்கள் மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தவில்லை - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அச்சுவேலியில் வர்த்தகர் மீது இனந்தெரியாத கும்பல் தாக்குதல்

## காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

(நெல்லியடி நிருபர்)



அச்சுவேலியில் இனந்தெரியாத கும்பலொன்று நடத்திய தாக்குதலில் கடை உரிமையாளரொருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

நேற்று முன்தினம் (10) காலை 06.15 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அச்சுவேலி வைத்தியசாலைக்கு முன்பாக உணவகமொன்றை நடத்திவரும் சின்னையா ஆலாலசுந்தரம் (54 வயது) என்பவரே பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

அச்சுவேலி வைத்தியசாலை வீதியூடாகத் தனது கடையைத் திறப்பதற்கு மோட்டார் சைக்கிளில் சென்றவேளை இடைவழியில் மறித்த இனந்தெரியாத கும்பல் கடுமையாகத் தாக்குதல் நடத்தியுள்ளது. குறித்த வீதியில் கார் ஒன்றில் காத்திருந்த இனந்தெரியாதோர் பொல்லுகளால் கடுமையாகத் தலை, கை என்பவற்றில் தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் தம்மை அடையாளம் காணாதவாறு முகத்தைத் துணியால் கட்டி மறைத்திருந்ததாகத் தெரியவருகிறது.

தாக்குதலுக்குள்ளானவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# ரயில் மோதி ஒருவர் உயிரிழப்பு!

(பு.கஜிந்தன்)

யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதிய ஒருவர் பளை பகுதியில் உயிரிழந்துள்ளார்.

யாழில் இருந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் 07.30 மணியளவில் பளை பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றை மோதித் தள்ளியது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரிசி மாபியாவை கூட்டுறவுத்துறையால் மாத்திரமே கட்டுப்படுத்த முடியும்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு






(பு.கஜிந்தன்)

அரிசி மாபியாவை கூட்டுறவுத்துறையால் மாத்திரமே கட்டுப்படுத்த முடியும். தனியார் துறையினர் இலாபத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு செயற்படுவர். ஆனால், கூட்டுறவுத்துறை, சேவையை அடிப்படையாகக் கொண்டு சிறியதொரு இலாபத்துடன் மாத்திரமே செயற்படும். அதனாலேயே கூட்டுறவுத்துறையை வலுப்படுத்துவதனூடாக அரிசி மாபியாவை எதிர்காலத்திலாவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இளம் ஆய்வாளர்கள் வலையமைப்பு நடத்திய இளம் கூட்டுறவாளர் மாநாடு தந்தை செல்வா அரங்கில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது. இதில் முதன்மைப் பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''1970 – 1980 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் முன்னுதாரணமாகச் சொல்லப்படக்கூடிய வகையில் வடக்கு மாகாணத்தின் கூட்டுறவுத்துறை செயற்பட்டது. இங்குள்ள எமது விவசாயிகளின் விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்து கொழும்புக்கு கொண்டுசென்று விற்பார்கள். திரும்பி வரும்போது எமது மக்களின் நுகர்வுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டுவந்து, பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக விற்பனை செய்வார்கள். அன்றைய காலத்தில் தனியார் துறையினர் நலிவடைந்திருந்தனர். காலப்போக்கில் போர் காரணமாக கூட்டுறவுத்துறை நலிவடையத் தொடங்கியது. ஒரு காலத்தில் அரசாங்கத்தின் நிவாரணங்களை வழங்கும் மையமாக பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கத் தொடங்கின. தற்போது தனியார் துறையினர் பலமடைந்துள்ள நிலையில், அவர்களுடன் போட்டிபோட முடியாத நிலைமைக்கு எமது பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவீனமடைந்துள்ளன. பல சங்கங்கள் தம்மிடமுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களின் இலாபம் ஊடாகவே பணியாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குகின்றன.

கூட்டுறவின் அடிநாதமே சேர்ந்து செயற்படுவதுதான். ஆனால், இப்போது கூட்டுறவில் சேர்ந்தாலும் தனிப்பட்ட ரீதியில் தாங்கள் என்ன இலாபத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நோக்கத்தில்தான் செயற்படுகின்றன. இதனால்தான் கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

அரிசி மாபியாவைக் கட்டுப்படுத்துவதற்காக கூட்டுறவு அபிவிருத்தி வங்கியூடாக நெல் கொள்வனவுக்கு நாம் கடன்களை வழங்குகின்றோம். நெல்லுக்கான நிர்ணய விலையை விட கூடுதலான விலைக்கு விவசாயிகளிடமிருந்து வேறு மாகாண தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். விவசாயிகளும் தமக்கு கூடுதலான இலாபம் கிடைக்கின்றதென விற்பனை செய்கின்றார்கள். அவர்கள் இவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லை பதுக்கி வைத்திருந்து அரிசிக்கான விலையைத் தீர்மானிப்பவர்களாக மாறுகின்றார்கள். கடந்த காலங்களில் நெல் அறுவடையின்போது அரிசியின் விலை குறைவடையும். ஆனால், தற்போது அரிசியின் விலையில் மாற்றமில்லை. இவ்வாறு தனியார் அரிசியின் விலையைத் தீர்மானிப்பதை மாற்றியமைப்பதற்கு எமது கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். அவர்கள் எங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து சிறியதொரு இலாபத்துடன் கூட்டுறவுச் சங்கங்களூடாக சந்தை விலையை விடக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யும்போது மக்கள் பயனடைவார்கள். அரிசி மாபியாவையும் கட்டுப்படுத்த முடியும்.

இவ்வளவு வலிமையான கூட்டுறவுத்துறையை மீண்டும் வளர்த்தெடுப்பதற்கு தலைமைத்துவப்பண்புள்ள இளையோர் அதிகளவில் இணைந்துகொள்ளவேண்டும். இங்கு வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த இளையோர் இணைந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நீங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கூட்டுறவுத்துறையைப் பலப்படுத்த வேண்டும்''- என்றார் ஆளுநர்.

ஆளுநரின் உரையைத் தொடர்ந்து இளம் ஆய்வாளர்களால் ஆளுநரிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன. அவற்றுக்கான பதில்களையும் ஆளுநர் வழங்கினார்.

# வவுனியாவில் சிறி சபாரட்ணத்தின் 39ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு

(சி.திவியா)







வவுனியாவில் சிறி சபாரட்ணத்தின் 39ஆவது நினைவுதினம் நேற்று முன்தினம் (10) அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறிசபாரட்ணத்தின் 39ஆவது நினைவு தினம் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிறிசபாரட்ணத்தின் படத்துக்கு தீபம் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் கட்சியின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரன், சிவசக்தி ஆனந்தன், வினோதரராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் உள்ளிட்ட பலரும், மதகுருமார், கட்சி உயர்பீட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும்

## ரெலோ உறுதி

(சி.திவியா)




வடக்கு, கிழக்கு எங்கும் பரந்துபட்ட அளவில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆட்சி மலர வேண்டும். அதில் நாங்கள் உறுதியாக இருப்பதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

''உள்ளூராட்சி சபைகளைப் பலப்படுத்துவது தொடர்பாக நாம் கலந்துரையாடியுள்ளோம். அந்தவகையில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியூடாக தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து சபைகளைப் பலப்படுத்துவதாகத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு எங்கும் பரந்துபட்ட அளவிலே தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆட்சி மலர வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த அடிப்படையில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களோடு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பதாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாகவே வவுனியா மாநகரசபை அமைய வேண்டுமென்பதும் எமது விருப்பம். எனவே, அதன் அங்கத்துவ கட்சிகளின் பிரதிநிதிகளோடு எமக்கு கிடைத்த விகிதாசார ஆசனங்களை எப்படிப் பயன்படுத்துவதென்பது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதனடிப்படையில் முடிவை எட்டுவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தொடர்ந்து பயணிப்பது தொடர்பான முடிவுகள் எதுவும் இன்று எடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எமது தலைமைக்குழு கூடி ஆராயவுள்ளது''- எனத் தெரிவித்தார்.

# பிரிவெனா பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு







(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை மற்றும் மாரஸ்சன சாசனரக்ஷக பலமண்டல பிரதேசத்தில் அமைந்துள்ள தம்ம பாடசாலைகளில் கல்வி கற்கும் 2,500 மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மலேஷியாவின் செந்துல் விகாரையின் பீடாதிபதி வணக்கத்துக்குரிய பூட்டாவத்தை சரணங்கர தேரர் தலைமையில் மாரஸ்சன தேசிய பாடசாலை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

மலேசியாவின் பௌத்த சங்க உறுப்பினர்கள் இதற்கு அனுசரணை வழங்கியுள்ளனர்.

ஹந்தான சர்வதேச பௌத்த கல்வி மையத்தின் இயக்குநர் வணக்கத்துக்குரிய பண்டித உடவத்தே விமலபுத்தி தேரரின் ஏற்பாட்டின் கீழ் பிரிவேனாவில் படிக்கும் 500 மாணவ துறவிகளுக்கு கிலான்பாசா (மருத்துவ அங்கி) வழங்கும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

# கொஸ்லந்தையில் கஞ்சா சேனை முற்றுகை



(ராமு தனராஜா)

கொஸ்லந்தையில் பாரிய கஞ்சா சேனைகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

கொஸ்லந்தை மாலந்த பகுதியில் அமைந்துள்ள கரப்பிஞ்சா வனப்பகுதியில் நேற்று முன்தினம் (10) பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நடத்திய சோதனையின்போது அங்கு பயிரிடப்பட்டிருந்த கஞ்சா சேனைகள் இரண்டை கண்டுபிடித்துள்ளதாகவும் கஞ்சா செடிகளை தீயிட்டு அழித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கரப்பிஞ்சா வனப்பகுதியில் அடர்ந்த காட்டுப் பகுதியில் கொம்ப கும்புரான் காட்டுப் பகுதியில் இவ்விரண்டு கஞ்சா சேனைகளும் காணப்பட்டதுடன், அதில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 6.5 அடி உயரமான கஞ்சா செடிகள் 72,870 மேலும் அரை ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 2 அடி உயரமான கஞ்சா செடிகள் 25,410 கைப்பற்றி தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இதன்போது குறித்த பகுதியில் சந்தேகநபர்கள் எவரும் இருக்கவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கொஸ்லந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில் பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அத்துமீறி வீட்டினுள் நுழைந்த நபர்: வீட்டு உரிமையாளர் தாக்கியதில் பலி

## ரிதிமாலியத்தயில் சம்பவம்

(ராமு தனராஜா)

ரிதிமாலியத்த, இங்கிரிய, யல்வல பிரதேசத்தில் அத்துமீறி வீடொன்றினுள் புகுந்த நபரொருவரை வீட்டு உரிமையாளர் தாக்கியதில் குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக ரிதிமாலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நபர் 28 வயதுடைய பெதியாகொட, ரிதிமாலியத்த, மஹியங்கனை பகுதியைச் சேர்ந்தவராவார்.

தாக்குதல் நடத்திய நபர் சமுர்த்தி அதிகாரியெனவும் குறித்த வீட்டில் அவரும் அவரது உடல் நலம் பாதிக்கப்பட்ட மனைவியும் வாழ்ந்து வந்துள்ளனரெனவும் தெரியவருகிறது.

நேற்று (11) அதிகாலை 12.10 மணியளவில் வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்த நபர் வீட்டிலிருந்த நபரைத் தாக்க முற்பட்ட வேளையிலேயே வீட்டிலிருந்த உலக்கையால் அவர் குறித்த நபரை பதிலுக்குத் தாக்கியபோது மேற்படி நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

குறித்த நபரின் மகளுக்கும் மரணித்த நபருக்குமிடையிலான காதல் தொடர்பே குறித்த நபர் வீட்டுக்குள் பிரவேசித்தமைக்கான காரணம் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் ரிதிமாலியத்த பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை ரிதிமாலியத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீரத்திடல் அல்-ஹிதாயா மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி



**(கோணாவத்தை செய்தியாளர்)**

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட வீரத்திடல் அல் - ஹிதாயா மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் திருமதி ஏ.எம்.முனாஸிர் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.எம்.வை.அறபாத் பிரதம அதிதியாகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எச்.நைரூஸ்கான், ஏ.ஏ.சியாத், ஏ.முஸ்தக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப்பணிப்பாளர் சட்டத்தரணி சீ.எம்.ஹலீம் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளுடன் போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளதுடன் வெற்றிபெற்ற வீரர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ் மற்றும் பரிசுப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# இடைநிறுத்தப்பட்ட ஐ.பி.எல். மீண்டும் ஆரம்பம்?



இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கிடையிலான போர்ப் பதற்றம் காரணமாக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட 2025 ஐ.பி.எல். தொடரின் எஞ்சியுள்ள போட்டிகள் இந்தியாவின் மூன்று முக்கிய நகரங்களில் மீண்டும் நடத்தப்படலாமெனத் தகவல் வெளியாகியுள்ளது.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் இதுவரை 57 போட்டிகள் நிறைவடைந்துள்ளன. பஞ்சாப் கிங்ஸ் - டில்லி கெபிடல்ஸ் இடையேயான 58ஆவது போட்டி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. இன்னும் 16 போட்டிகளே மீதமிருக்கின்றன.

இந்நிலையில், மே மாதத்துக்குள் மீதமுள்ள போட்டிகளை நடத்தி முடிக்க பெங்களூர், சென்னை மற்றும் ஹைதராபாத் நகரங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்திய அரசாங்கம் அனுமதியளித்தால் இந்த மூன்று நகரங்களிலும் மீதமுள்ள போட்டிகள் நடத்தி முடிக்கப்படலாமெனக் கூறப்படுகிறது.

இருப்பினும், இது குறித்து ஐ.பி.எல். நிர்வாகம் உத்தியோகபூர்வமாக எந்தவொரு அறிவிப்பையும் வெளியிடவில்லை. மேலும், வெளிநாட்டு வீரர்கள் பலரும் தங்களது தாயகம் திரும்பி வருகின்றனர். அவர்களை மீண்டும் போட்டிக்காக ஒருங்கிணைக்கும் பணிகளும் நடைபெறுகின்றன.

# ஏப்ரல் மாதத்துக்கான பரிந்துரை பட்டியல் வெளியீடு

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஏப்ரல் மாத சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையைத் தெரிவு செய்ய தலா 03 வீரர் மற்றும் வீராங்கனைகள் கொண்ட பரிந்துரை பெயர்ப் பட்டியலை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

அதன்படி சிறந்த வீரருக்கான பரிந்துரை பெயர்ப்பட்டியலில் சிம்பாப்வேயின் பிளெசிங் முசரபானி, பங்களாதேஷின் மெஹதி ஹசன் மிராஸ், நியூஸிலாந்தின் பென் சியர்ஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

சிறந்த வீராங்கனைக்கான பரிந்துரை பெயர்ப் பட்டியலில் ஸ்கொட்லாந்தின் கேத்ரின் பிரைஸ், வெஸ்ட் இன்டீஸின் ஹேலி மேத்யூஸ், பாகிஸ்தானின் பாத்திமா சனா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# இலங்கையுடனான றக்பி தொடரை வென்ற நியூஸிலாந்து




டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. அனுசரணையில் நடைபெற்ற 85 கிலோ கிராம் எடைக்குட்பட்ட நியூஸிலாந்து றக்பி அணிக்கும் இலங்கை றக்பி அணிக்குமிடையிலான இரண்டாவது போட்டியிலும் நியூஸிலாந்து அணி 32:6 என்ற புள்ளிகள் கணக்கில் அபார வெற்றியீட்டி சேர் கிரஹாம் வில்லியம் ஹென்றி சம்பியன் பட்டத்தை வென்றது.

கண்டி நித்தவளையில் கடந்த 04ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் 50:10 என்ற புள்ளிகள் கணக்கில் நியூஸிலாந்து அணி இலகு வெற்றியீட்டியது. இந்நிலையில், கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் சனிக்கிழமை (10) இரவு மின்னொளியில் நடைபெற்ற போட்டியில் நியூஸிலாந்து 05 ட்ரைகள், 02 கொன்வேர்ஷன்கள், ஒரு பெனல்டி மூலமும் இலங்கை அதன் புள்ளிகளை 02 பெனல்டிகள் மூலமும் பெற்றன. போட்டியின் ஆட்டநாயகனாக நியூஸிலாந்தின் பென் மெக்சன், தொடர்நாயகனாக பிரான்சிஸ் மொறிசன் ஆகியோர் தெரிவாகினர். 118 வருடங்களின் பின் நியூஸிலாந்து அணியொன்றை இலங்கைக்கு அழைத்துவருவதில் முக்கிய பங்காற்றிய கிறஹாம் ஹென்றிக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுக்ரி கொன்ராட்டை அனைத்துவித வடிவத்துக்கும் பயிற்சியாளராக நியமித்த தென்னாபிரிக்கா



தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் தேசிய வெள்ளைப்பந்து அணியின் பயிற்றுவிப்பாளராக அவ்வணியின் டெஸ்ட் பயிற்சியாளர் சுக்ரி கொன்ராட் 2027 ஐ.சி.சி. உலகக்கிண்ணம் வரைக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுக்ரி கொன்ராட் தென்னாபிரிக்க டெஸ்ட் அணிக்காக 2023ஆம் ஆண்டு பயிற்சியாளராகத் தெரிவானார். இவரது தலைமையில் தென்னாபிரிக்க அணி 2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்திரேலியாவுடன் தென்னாபிரிக்கா இறுதிப் போட்டியில் வரும் ஜூன் மாதம் 11ஆம் திகதி மோதவிருக்கிறது.

58 வயதாகும் சுக்ரி கொன்ராட் தனது முதல் வெள்ளைப்பந்து பயிற்சியாளராக எதிர்வரும் ஜூலையில் சிம்பாப்வேயுடன் நடைபெறும் தொடருடன் பொறுப்பேற்கிறார். டெஸ்ட்டில் சிறப்பாக செயற்பட்டதால் இவருக்கு இந்த வாய்ப்பை வழங்கியதாகவும் வெள்ளைப் பந்தில் என்ன மாதிரியான மாற்றத்தைக் கொண்டுவருவாரென ஆர்வமாக இருப்பதாகவும் தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் இயக்குநர் கூறியுள்ளார்.

# விளையாட்டுத் துளிகள்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் 19 வயதுக்குட்பட்ட இளையோர் அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரின் ஆறாவதும் இறுதியுமான போட்டி மழையால் கைவிடப்பட்டதை யடுத்து 06 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பங்களாதேஷ் அணி 3:2 எனக் கைப்பற்றியது.

★★★★★★★★★★★★

சமூக வலைத்தளங்களில் ஒன்றான இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 19 மில்லியன் பின்தொடர்பவர்களைப் பெற்ற முதல் ஐ.பி.எல். அணி என்ற சாதனையை ஆர்.சி.பி. படைத்துள்ளது.

அந்த அணிக்கு அடுத்தபடியாக 18.3 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் சி.எஸ்.கே. 2ஆவது இடத்திலும் 17 மில்லியன் பின்தொடர்பவர்களுடன் மும்பை இந்தியன்ஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

★★★★★★★★★★★★

மெட்ரிட் ஓபன் சம்பியன் பட்டம் வென்ற கெஸ்பர் ரூட், புதிய டென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் 15ஆவது இடத்திலிருந்து 7ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

இறுதிப்போட்டி வரை சென்ற ஜெக் டிராப்பர், ஒரு இடம் முன்னேறி 5ஆவது இடத்தைப் பிடித்தார். செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 6ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். முதலிடத்தில் இத்தாலியின் ஜெனிக் சின்னர் நீடிக்கிறார்.

★★★★★★★★★★★★

இலங்கை - இந்திய மாற்றுத்திறனாளி கிரிக்கெட் அணிகள் மோதிய 05 போட்டிகள் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான ரி20 கிரிக்கெட் தொடர் பெங்களூரில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 5:0 எனத் தொடரைக் கைப்பற்றியது. ஆட்ட நாயகன் விருதை நரேந்திர மாங்கூர், தொடர் நாயகன் விருதை ரவீந்திர சாண்டே கைப்பற்றினர். இந்திய அணிக்கு கிண்ணத்துடன் ரூ. 07 இலட்சம் பரிசுத் தொகையும் இலங்கை அணிக்கு ரூ. 1.70 இலட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டன.

# களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் பிரதேச சம்பியனாகத் தெரிவு

**(மட்டக்களப்பு செய்தியாளர்)**



மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான விளையாட்டுபோட்டி - 2025 அண்மையில் களுதாவளை கெனடி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அதில் குழுநிலை மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளின் அடிப்படையில் களுதாவளை கெனடிவிளையாட்டுக் கழகம் இம்முறை பிரதேச மட்டத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குழுநிலை போட்டிகளில் முதலாம் இடத்தை கிரிக்கெட் - ஆண்கள், எல்லே - ஆண்கள், எல்லே - பெண்கள், கபடி - பெண்கள், வலைப்பந்து - பெண்கள், கரப்பந்து - பெண்கள் என 06 தங்கப்பதக்கங்களுடன், கிரிக்கெட் - பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் பெற்றது.

மெய்வல்லுனர் போட்டிகளில் இதுவரை காலமும் இல்லாத வகையில் அதிக பதக்கங்களைப் பெற்றுள்ளது. அந்த வகையில் 30 தங்கப்பதக்கமும் 20 வெள்ளிப்பதக்கமும் 20 வெண்கலப்பதக்கமும் அடங்கலாக 70 பதக்கங்களை வென்றுள்ளது. குறிப்பாக, இம்முறை கெனடி பெண்கள் அஞ்சல் அணியினர் இரண்டு அஞ்சல் போட்டிகளிலும் வெற்றிவாகை சூடியுள்ளனர்.

பிரதேச மட்டத்தில் இரண்டாம் இடத்தை செட்டிபாளையம் நியூட்டன் விளையாட்டுக் கழகம் பெற்றது. அக்கழகம் 06 தங்கப் பதக்கங்களுடன் 10 வெள்ளிப்பதக்கம், 03 வெண்கலப் பதக்கம் என 19 பதக்கங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஆண்கள் பிரிவில் சம்பியனாக கெனடி விளையாட்டுக் கழகத்தின் வீரர்களான தி.குகப்பிரியன் (200,400,800 மீற்றர்) நி.தருண் (1500,5000,10000 மீற்றர்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அதேபோல், பெண்கள் பிரிவில் நியூட்டன் கழக ஜீ.வாசனாஞ்சலி (400,800,1500 மீற்றர்) தெரிவுசெய்யப்பட்டார்.

தற்போது விற்பனையில்...
மாணவர்களின் கல்வி வழிகாட்டியான
ஜீனியர் தமிழன்
மே மாத சஞ்சிகைகள்
பாடசாலை பாடத்திட்டத்தின்படி, தவணைகளின் அடிப்படையில், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுக்கப்பட்டு வெளிவருகின்றன.


மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo −07